# வேதநாயகனார் நினைவு மலர்



தொகுத்தவர்: திரு. ஜி. பக்தவத்சலம்

# STELLA FILM Co., Ltd.

111, SAN THOME HIGH ROAD,
**MYLAPORE, MADRAS-4.**

Blessed by

His Eminence, Valerian Cardinal Gracias,
His Eminence Cardinal Gilroy,
His Excellency the Most Rev. Leo
P. Kierkels, C. P.
Former Apostolic Internuncio in India.
Archbishops, Bishops and Priests

*Our Patron :*

The Most Rev. Dr. L. Mathias, S.D.B.
Archbishop of Madras - Mylapore

*President :*

Chevalier J. L. P. Roche Victoria, K.S.G., M. L. A.

Stella Film Company Ltd., proudly announces unique Events filmed—Solemn Consecration of three Bishops at Madras and the National Marian Congress 4th-8th December '54 at Bombay both highlight news reels for "Pushpa", now under production—release this year. We cordially invite you to take shares, in this laudable concern which primarily exists for the spread of Christian and high moral principles and to counteract the godless ideologies which some of the present day films are propagating.

*Invest where Security 6o to 100% Dividend is Assured.*

*Apply :* **A. M. LOUIS, B. M., S. D.,**
*Production Office,*
111, San Thome High Road, MYLAPORE, MADRAS-4

# வேதநாயகனார் நினைவு மலர்

தொகுத்தவர் :
திரு. ஜி. பக்தவத்சலம், சென்னை

வெளியிடுவோர்:
மேதை வேதநாயகனார் விழாக் கமிட்டி,
சென்னை.

# உள்ளிருப்பவை

நல்ல தமிழ் மகன்
கி. ஆ. பெ. விசுவநாதம் ... ... 1

மறத்தற்கியலாத நாயகம்
கா. அப்பாதுரை, M.A., L.T., ... ... 4

விழாத் தலைமையுரை
(1) K. S. இராமசாமி, B.A., B.L., ... 10
(2) மயிலை சிவமுத்து ... ... 13

இசையுலகும் வேதநாயகரும்
P. சாம்பமூர்த்தி, B.A., B.L., ... ... 17

தன்னேரில்லாத் தமிழ் நாயகர்
பி. ஸ்ரீ, ஆச்சாரியா ... ... 21

வாழ்வுக்கொரு வழிகாட்டி
சச்சிதானந்தம், B.A., L.T., ... ... 28

குடியரசுக்கு அடிகோலியவர்
சரவணபவானந்தர் ... ... 33

அறவழி காட்டிய அன்பன்
வீ. ப. நடராசன் ... ... 37

நினைவுகூர் சின்னங்கள் வேண்டும்
ஆ. கார்மேகக்கோன் ... ... 41

வேதநாயகப் பெரியார்
ஜி. தியாகராஜன் ... ... 46

நன்றியுரை
வே. ஞா. ஆரோக்கியசாமி ... ... 46

## YOUR BUILDINGS !

" The Wisdom of the past, followed
Ensure the Best for future "—GITA

Following the wise conclusions of the past, the BEST is truly ensured for the future.

In HARDWARE, it has been the tradition, of all discriminating buyers, for THREE decades now, to procure material ONLY from :

# P. V. RATHAKRISHNA CHETTY & BROS.,

45, Venkatachala Mudaly Street, Park Town, Madras—3

It is obvious, that they give you the BEST in Builders Hardware. You make no mistake buying their QUALITY material, worth their price and hence the cheapest .— for anything in Builders Hardware and Plastics Etc.,—and rest perfectly satisfied—all the future.

Make Sure, you buy the BEST-it is P. V. R. C. Surely

# P. Alli Mohamed Zinna & Co.

67-68 Raxan Bazaar

P. T. Madras 3



Direct Importers
of




Wick Stoves of Cooking Ranges
Pressure Stores, Petromax
Lamps & Lanterns, Blow lamps
Coffee grinders, Meat Minces
Fruit Juice Machines,
Kitchen ware, Crokery
Glassware etc. etc.

Silk Sarees

Woolen Suitings

Dress Materials

Presentation Novelties

Phone : 55617

**TIP TOP**
**Ladies & Gents Tailorings**

**Bright value at Light Price**

**MOHINI STORES**
FASHION SILK HOUSE

1/47 RATTAN BAZAAR, MADRAS—3

---

**மேதை வேதநாயகம்**
(வேதநாயகனாரின் சுவையான வரலாறு. பசுமலை, வித்வான் வீ. ப. நடராசனார் எழுதியது. 'தித்திக்கும் மாம்பழம் போன்றது'' என திரு. ராஜாஜியால் பாராட்டப்பட்டது.) 0—15—0

**சத்திய வேதக் கீர்த்தனைகள்**
(அழகிய, நவீன பதிப்பு.) 0—12—0

**திருவருண்மாலை,**
**திருவருள் அந்தாதி.** 0—5—0

தே நோபிலி அச்சகம்
...மதுரை...

## பாரி நிலைய வெளியீடுகள்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சக்கரவர்த்தி ராஜ கோபாலாச்சாரி, டாக்டர் மு. வரதராசன், மறைமலையடிகள், வ. உ. சிதம்பரனார், அறிஞர் அண்ணாதுரை, கி. ஆ. பெ. விசுவநாதம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, குன்றக்குடி அடிகளார், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம், பேராசிரியர் அன்பழகன், கு. ராஜவேலு, 'கல்கி' ஆசிரியர் சோமு முதலிய தமிழ் அறிஞர்களின் நூல்கள் தொடர்ந்து வருகின்றன. நூல் நிலையங்களுக்குத் தேவையுள்ள எல்லாத் தமிழ் நூல்களும் கிடைக்கும்.

**பாரி நிலையம்**

59, பிராட்வே : சென்னை—1.

Phone: 55388

*Save Your Valuable Time*

YOU CAN NOW GET ALL YOUR REQUIREMENTS FROM US AT MOST COMPETETIVE PRICES FOR PROVISION & OIL MAN STORES.

*Sole Distributors for :*

**COCA-COLA**

## EMPIRE STORES

3 & 4, Fruit Market, Esplanade, Madras—1.

*Note*: Free Delivery at Your Door in Madras City.

பிரபல நாவலாசிரியராகிய

## வடுவூர் K. துரைசாமி அய்யங்கார் B. A.,

அவர்கள் இயற்றிய

## தேனினுமினிய தமிழ் நாவல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| திகம்பர சாமியார் அல்லது கும்பகோணம் வக்கீல் | 2 | பாகங்கள் | விலை ரூ. | 4—8—0 |
| மேனகா ... | 2 | ,, | ,, | 4—8—0 |
| மதன கல்யாணி ... | 3 | ,, | ,, | 7—0—0 |
| சௌந்தர கோகிலம் ... | 3 | ,, | ,, | 8—0—0 |
| மாயா விநோதப் பரதேசி ... | 2 | ,, | ,, | 7—0—0 |
| பூர்ண சந்திரோதயம் ... | 4 | ,, | ,, | 10—0—0 |
| பாலாமணி அல்லது பக்காத் திருடன் | | | ,, | 3—8—0 |
| வசந்த மல்லிகா ... | ... | | ,, | 2—8—0 |
| வித்தியா சாகரம் ... | ... | | ,, | 2—4—0 |

## மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| சர்வ சமய சமரசக் கீர்த்தனை | ... | ரூ. 1—7—0 |
| நீதி நூல் | ... | (அச்சில்) |
| பெண்மதி மாலை | ... | ,, |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... | ,, |
| சுகுண சுந்தரி | .... | ,, |

கிடைக்குமிடம் :—

## B. இரத்தின நாயகர் சன்ஸ்

வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை—1.

THE IDEAL PUBLISHERS ★ TIRUCHIRAPALLI

- தமிழ் நாட்டு மிகவும் வந்திக்கத்தக்க மேற்றிராணிமார்களின் ஆசிர் பெற்றவை.
- கத்தோலிக்க ஆசிரியர்களால் எழுதப்பெற்று கத்தோலிக்க ஸ்தாபனத்தால் பிரசுரிக்கப்பெற்றவை.
- கத்தோலிக்கப் பள்ளிகளில் பாடங்களாக வைக்க மேற்றிராணிமார்களால் ஒரே முகமாக சிபார்சு செய்யப்பெற்றவை.

**புதிய பாடத் திட்டப்படி தயாரிக்கப்பட்டு அரசியலார் பாடப் புத்தகக் கழகத்தாரின் அங்கீகாரம் சமீபத்தில் பெற்றவை.**

- "சிறுவர் தமிழ் நாட்டு வாசகங்கள்" 1 முதல் 7 வகுப்புகளுக்கு.
- "சிறுவர் இந்தியச் சரித்திரங்கள்" 3, 4 & 5 வகுப்புகளுக்கு.
- "சிறுவர் தமிழ்நாட்டுக் கணிதம்" 3, 4 & 5 வகுப்புகளுக்கு.

**தங்கள் தேவைக்குரிய புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரியுங்கள்**

கிடைக்குமிடம்:

D. N. P. அச்சகப்பண்ணை,
தே நொபிலி பிரஸ் P.O. மதுரை

அல்லது

(2) தி ஐடியல் பப்ளிஷர்ஸ்,
நெ. 1, சின்னக்கம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி


Pilot
உலகப் பிரசித்திபெற்ற
பௌன்டன் பேனாவும் இங்கியும்
PILOT INK
2 oz
GRADE
'NG INK
PILOT INK
PILOT INK
ENS
USE
BS
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE. CATHOLIC CENTRE, ARMENIAN ST. MADRAS-1. FACTORY RED HILLS, MADRAS

# நல்ல தமிழ் மகன்

(திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்)

அறிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இந்நாட்டின் செல்வம். ஒரு நல்ல தமிழ் மகன். 1826-ல் பிறந்தவர். அவர் மறைந்த ஆண்டு 1889. அறுபத்து மூன்று ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்தவர். பிறந்த ஊர் வேளாண் குளத்தூர். இது திருச்சியை அடுத்துள்ளது.

அறிஞர் வேதநாயகம் ஆங்கில அறிஞனாக, தமிழறிஞனாக, சட்ட அறிஞனாக, மொழி பெயர்ப்பு அறிஞனாக, நீதிபதியாக, இசைப் புலவனாக, நூலாசிரியனாக, கதாசிரியனாக, ஒழுக்க சீலனாகத் திகழ்ந்தவர். சுருக்கமாகக் கூற வேண்டுமானால் அவரது அறிவும், திறமையும் பிறரது உள்ளத்தே பதிந்திருந்தது எனக் கூறலாம்.

அவர் காலத்திய நீதிபதிகள் திவான் ரகுநாத ராவும், ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயரும் ஆவர். அவர்காலத்திய தமிழ்ப் புலவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், சி. வை. தாமோதரம் பிள்ளையும் ஆவர். அவர்காலத்திய இசைப் புலவர்கள் தியாகையர்வாளும், முத்துசாமி தீக்ஷிதர்வாளும்.

திருச்சி மாவட்ட நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகவும், தரங்கையில் சீகாழியில் நீதிபதியாகவும் வேலை பார்த்தவர். ஓய்வு பெற்று மாயவரத்தில் இருந்த போது மாயூரம் நகரமன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று **பொதுத் தொண்டு செய்வது எப்படி?** என்பதைப் பொது மக்களுக்கு முதல்முதலாகச் செய்துகாட்டிய பொது மக்களின் தலைவரும் அவரே யாவர்.

அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமே தமிழ் மொழியில் முதன்முதல் வெளிவந்த நாவலாகும். சட்ட நுணுக்கங்களைப் பற்றி முதன் முதலில் தமிழில் எழுதி வெளியிட்ட பெருமை அவரையே சேர்ந்தது.

இசை அரங்குகளில் தெலுங்கும், வடமொழியும் இடம் பெற்று, தமிழ் வெறுத்து ஒதுக்கப் பெற்றுவந்த அக்கா லத்திலேயே தமிழுக்கு முதன்மை தந்து, சமயச் சார்பு சிறிதுமில்லாது பொதுக் கருத்துகளைப் புதுவகையில் புகுத்தி, இலக்கண வரம்பு பிறழாது தமிழ்ப் பாடல்கள் பலவற்றைச் சுவைபடப் பாடி தமிழிசையின் மறுமலர்ச் சிக்குப் புத்துயிர் அளித்த பேரறிஞரும் அவரே யாவர்.

நீதிபதி வேதநாயகம் எழுந்து நின்றார். வழக்கறி ஞர்களும், மற்றவர்களும் எழுந்து நின்றார்கள். அது போது நீதிபதியின் வாயிலிருந்து வந்த சொற்கள் இவை :—

"இந்த வழக்கில் உண்மையைக் காணுவது உள்ள படியே எனக்கு கடினமாகத்தான் இருந்தது. நேற்றிரவு வாதி என் வீட்டிற்கு வந்து இலஞ்சம் கொடுத்தபோதுதான் எனக்கு உண்மை வெளிப்படையாக விளங்கியது. ஆகவே நீதி எதிர்தரப்பிற்கும், ழுன்னிப்பை வாதிக்கும் அளிக்கிறேன்.

இந்த இடி கோர்ட்டை மட்டுமல்ல; நகரையே பல நாள் நடுங்க வைத்துவிட்டது.

குதிரைப் பந்தயம் நடைபெற்றது. அதில் ஒரு குதிரை தோற்றுப் போய் கடைசியாக வந்து சேர்ந்தது. அதைக் கண்டு எல்லோரும் நகைத்தனர். கடைசியாக வந்த குதிரையின் உரிமையாளன் தான் பிரதாப முதலி யார். அவர் மகிழ்ச்சியோடு சொன்னது என்ன தெரி யுமா ?

"என் குதிரைதான் எல்லாக் குதிரைகளையும் விரட்டி யடித்தது என்பது எனக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். ஆனால் அக்குதிரைகள் அனைத்தும் என் குதி ரையைக் கண்டு ஏன் பயந்து ஓடுகின்றன என்பதுமட் டும் விளங்கவில்லை." என்பதே. இது அறிஞர் வேதநாய கம் பிள்ளை அவர்கள் எழுதிய கதையில் காணப்படும் கற் பனை. இதுமட்டுமா ? தட்டார்களிடம் நகை செய்யக்

கொடுக்க அஞ்சியே சிவன் பாம்பை அணிந்து கொண்டான் என்பதும், ஆடை வணிகர்களின் அளவு கடந்த பொய்க்கு அஞ்சியே சிவன் புலித்தோலை அணிந்திருக்கிறான் என்பதும் அவரது கற்பனைக் கதைகளேயாகும். இவை அனைத்தும் அவரது நகைச்சுவைத் திறமையை நமக்கு நன்கு விளக்குகின்றன.

பெண் கல்விக்காகவும், பெண் நெறிக்காகவும், பெண்ணின் பெருமைக்காகவும் அவர் செய்த தொண்டு தமிழகத்திலே முதன் முதலாகச் செய்யப்பெற்ற பெருஞ் சமூக சீர்திருத்தத் தொண்டாகும்.

நீதிநூல், சித்தாந்த சங்கிரகம், பெண்மதிமாலை, திருவருள் அந்தாதி, சர்வசமய சமரசக் கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம் முதலிய உயர்ந்த நூல்கள் தமிழ் மக்களுக்கு அவர் வைத்துப்போன சொத்துக்கள்.

வாழ்ந்தபோது அறிந்து வாழாமல், மாண்ட பிறகு மாரடித்து அழுகின்ற தமிழ் மக்களின் பரம்பரைக் குணத்திற்கு அறிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்களும் இலக்கானார்கள். அவரது அறிவும், ஆற்றலும், நேர்மையும், ஒழுக்கமும் கலந்த உயர்ந்த பண்பு பிறரிடத்தே காணப்பெறாத ஒன்றாகும். அன்று அவர் சரியாகப் போற்றப் பெறாமைக்குக் காரணம் **பொறாமை**. இன்றும் அவர் சரியாகப் பாராட்டப் படாமைக்குக் காரணம் **அறியாமை** எனத் துணிந்து கூறலாம்.

இனிமேல் அவரை வாழ்த்துவதாலோ, போற்றுவதாலோ அவருக்குப் பயன் ஏதும் உண்டாகப் போவதில்லை. நாம் வாழ, நமது மொழி வாழ, நமது இசை வாழ, நமது நாடு வாழவேண்டுமானால் நல்லறிஞர் வேதநாயகத்தை நாம் வாழ்த்தியாகவேண்டும். அது மட்டுமல்ல ; அவரது நெறியில் நின்று நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைக்கவேண்டும்.

வாழட்டும் தமிழகம் !

# தமிழர்கள் மறத்தற்கியலாத நாயகம்

[பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம். ஏ. எல் டி.]

வேதநாயகம் பிள்ளையவர்கள் தமிழில் தோய்ந்து எழுதிய நூல்களைப் பற்றி எனக்குத் தெரிய ஓரளவு வாய்ப்பு ஏற்பட்டதென்றால் அதற்குக் காரணம் நான் ஒரு பள்ளியாசிரியனாய் இருந்தவன் என்பதே. அவர் சர்வசமய சமரசக் கீர்த்தனை, நீதிநூல், புனைகதைப் பகுதிகள் ஆகியவை அருகலாகத் துண்டுத் துணுக்கள வில் பாடப்புத்தகங்களில் இடம் பெற்றதுண்டு. அவர் சீரிய தனிப் பண்புகளை அவ்வுருவிலும் அவைகாட்டி நின்றன.

**அவரை உரை நடையின் தந்தை என்று கூறுவது மரபு. அவர் உரைநடையின் தந்தை மட்டுமல்ல. புனை கதையின் தந்தை. நகைச்சுவைக்கு முன்னோடி. நீதிபதி மட்டுமல்ல, நீதி நூல் தந்த நீதிநாயகம்.**

பத்தொன்பதாம் நூற்றுண்டு தமிழின் பழமை தளர்ந்த நூற்றுண்டு. ஆங்கிலத்தின் புதுமை பொலிவுற்ற நூற்றுண்டு. தமிழின் மறுமலர்ச்சியில் பழமைப் புகழ் தளிர்த்துப் புதுமை மணம் பூத்த இருபதாம் நூற்றுண்டல்ல அது. ஆயினும் அந்த இருபதாம் நூற்றுண்டின் கருவாக இயங்கிய பல அறிஞர் அன்று நிலவினர். அவர்களிடையே வேதநாயகமும் வள்ளலாரும் குறிப்பிடத்தக்கவர்கள். வேதநாயகத்தினிடம் இருபதாம் நூற்றுண்டின் ஒளியை மட்டுமின்றி, வர இருக்கும் இருபத்தோன்றும் நூற்றுண்டின் ஒளியைக்கூடக் கருநிலையில் காணலாம். நாம் இன்றடைந்துள்ள புது மலர்ச்சியின் முன்னேற்றக் கண்கொண்டு பார்த்தால், நாம் இன்னும் அடையவேண்டிய அரும் புது மலர்ச்சியின் அரும்புகளைக் கூட அவரிடமிருந்து பெறலாம்.

வேதநாயகத்தின் பொதுச் சிறப்புகளே அவருக்குச் சிறந்த பெரியார்களிடையே முன்னணியிடம் தரத் தக்கவை. ஆனால் பள்ளியாசிரியன் என்ற முறையில் அவ

ருக்கு இன்னும் பெரிதளவும் உரித்தாயிருக்கின்ற ஒரு பெருஞ் சிறப்பை நான் காண்கின்றேன். நம் பாடல்கள், புனை கதைகள், இலக்கிய ஏடுகள் பல — தமிழில் மட்டுமல்ல, ஏனைய மொழிகளில் கூட — வருங்கால உலகின் வித்துக்களான பள்ளி மாணவர், மாணவியரை எண்ணியோ, தாய் மடியிலும் தந்தை மடியிலும் தவழ்ந்திறங்கி ஓடியாடும் வாழ்க்கைப் பள்ளியாகிய குடும்ப வாழ்வை எண்ணியோ எழுதப்பட்டவை அல்ல. இலக்கியங்கள் பெரும்பாலும் பள்ளிக்குத் தகாதவையாய் இருப்பவை. இதனாலேயே, வகுப்புகளின் பலபடிகளை, வயதின் பல பருவங்களை எண்ணி அவை வகுக்கப்பட முடியவில்லை; வரிசைப்படுத்தப்பட முடியவில்லை. அவற்றின் பொருளும் உணர்ச்சியும் பண்பும் அப்பருவத்தினர் அறியாத — அறிந்தாலும் அவர்களை மேம்படுத்த உதவாத — குடும்பப் பண்பற்ற 'காதல்' பெயருடைய 'நோதல்' இலக்கியமாகவே உள்ளன. இப்பொழுது விதிக்கு விலக்கான ஒருசில உலக இலக்கிய ஏடுகளில் — மிகச் சில தமிழ் இலக்கிய ஏடுகளில் — சிறப்பாகச் சங்க காலத்துக்குப் பிற்பட்ட எழுத்தாளர் கலைப் படைப்புகளுள் வேதநாயகர் நூல்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

வேதநாயகம் பிள்ளையவர்கள் பாடல்களை மட்டுமல்ல, புனை கதைகளைக் கூடத் தாய் வாசிக்க, மகன் கேட்கலாம்; அண்ணன் வாசிக்கத் தங்கை கேட்கலாம்; தந்தை வாசிக்கத் தாய் கேட்கலாம். இவை மட்டுமன்று. பள்ளிப்பாடமாக வைப்பதற்கு முற்றிலும் பொருத்தமானவை அவை.

புனைகதை வாசிப்பதால் பிள்ளைகள் — இளைஞர்கள் கெட்டு விடுவதாகக் கூறுபவர் கூட, அக் கேட்டுக்கு ஒரு மருந்தாக வேதநாயகத்தின் 'பிரதாப முதலியார் சரித்திரத்தை' வாசிக்கும்படி கூறலாம். ஏனெனில் 'பிரதாப முதலியார் சரித்திரம்' தமிழின் முதற் புனைகதை. முதன்மை வாய்ந்த தனிச் சிறப்புடைய புனைகதை மட்டு

மல்ல. புனைகதையுலகில் வேறு எந்தமொழிப் புனைகதைக்கும் எளிதில் வாய்க்காத பெருமை அதற்குண்டு. கிருஸ்தவ வேதத்துக்கு, குரானுக்கு, திருக்குறளுக்குப் பகரமாக அதைச் சமய அன்பர் தத்தம் சிறுவருக்குக் கொடுத்து வாசிக்கச் செய்யலாம். அவ்வுயர் நூல்களை விரும்பி வாசிக்காத பிள்ளைகளும் அதை விரும்பி வாசிப்பர். அவ்வுயர் நூல்களை வாசிப்பதால் அவர்களுக்குக் கிட்டவேண்டுமென்று பெரியோர் விரும்பும் பயனையும் அவர்கள் எளிதில் பெறுவர்!

இவ்வளவு சிறப்புடைய நூல்களை அவற்றின் தகுதியளவு இன்றைய பள்ளிகளில் ஏனோ பாடமாக வைப்பதில்லை! நூல் எழுதுபவர் குற்றமா, வெளியீட்டாளர் குறையா, அரசியலார் அசட்டை மனப்பான்மையா? யான் அறியேன்!

வேதநாயகம் பிள்ளையை நகைச்சுவையின் தந்தை என்பார்கள். ஆனால் அவர் நகைச்சுவை வேறு, நகைச்சுவை என்ற பெயரால் நம்மிடையே அடிக்கடி உலவும் பண்பு வேறு. உயிர் நகைச்சுவைக்கு ஆங்கிலேயர் நகைப் பண்பு (humour) என்றும், அதிற் குறைபட்ட நகைச்சுவைக்கு நகைத்துணுக்கு (wit) என்றும் வெவ்வேறு பெயரிட்டழைப்பர். பின்னதே பண்பு குறைவுற்ற இடங்களில் நடமாடுவது. முன்னதற்கு இலக்கணங் கூறிய உயர் பண்பாட்டறிஞர், 'அது நகைப்பவனுக்கும், நகைக்காளாபவனுக்கும் உடனின்று கேட்பவர்க்கும் ஒருங்குக — அவை வெவ்வேறு முறையில் இன்பம் பயப்பிப்பதாய் இருக்கவேண்டும். சமுதாய நலன், மனித நலன் பயக்கும் பண்பாளர் குறைபாட்டை — முடியுமானால் மனிதநலன், சமுதாய நலன் பயக்குங் குறைப்பாட்டையே ஒருவன் பண்பினின்று பிரித்தெடுத்துக் காட்டி உவகையும் நகையும் ஒருங்கே பயப்பிக்க வேண்டும்' என்று கூறுவர். நானறிந்தவரை ஷேக்ஸ்

பியர் ஒருவர் நகைச்சுவையே இவ்விலக்கணத்துக்குரிய இலக்கியமாக உலக இலக்கியத்தில் திகழ்கிறது. அதனுடன் ஒத்த இலக்கியத்தைத் தமிழிலக்கியத்தில், சங்க இலக்கியத்தில், காவிரி நுண்மணலில் பொன்னென ஆங்காங்கு மினுங்கக் காணலாம். வேதநாயகத்தின் இலக்கியத்தில், உரைகளில் பாடல்களில் பொதுவாக பிரதாப முதலியார் சரித்திரத்தில் சிறப்பாக அது கோலார் தங்க வயல்களில் திகழும் அளவு மிளரக் காண்போம்.

இயற்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே உயர்ந்த பண்புகள் நிரம்பப் பெற்றவர்கள் சொல்லக் கேட்டால் கேட்பதற்கு இன்பமாக இருக்கும். கேட்டபின்னும் அது மனதில் படிந்து இன்னல்களை எழுப்பி நற்பண்பூட்டும் வகையாக யாரையாவது திட்ட வேண்டுமென்றால் கூட, அவருக்கும் அன்புகனியக் கூறும் வகைகள் உண்டு. இப்பண்பு வேதநாயகம் பிள்ளையவர்களிடம் நிரம்ப உண்டு. பிற இலக்கிய எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், வேதநாயகம் பிள்ளையின் இப்பண்பை உடையவர் சிலர். அவரளவு அது வாய்க்கப் பெற்றவர்கள் மிகமிக அரியர். உலக அரங்கிலே வேதநாயகத்தினளவு அதனை உடையவர் ஷேக்ஸ்பியர் ஒருவரே. அவரிடம் தான் வேதநாயகத்தைப்போல் நகைச் சுவையில் அன்பும், அன்பில் நகைச்சுவையும் ஒன்று சேர்ந்து இருக்கக் காண்கிறோம். வெறும் அழகோ, வெறும் கேலியோ ஆக இல்லாமல், அன்பும் அறிவும் பண்பும் பயனும் நிறைந்தவையாக அவை இருவரிடமும் காட்சி தருகின்றன.

பெண்ணுரிமை, சமய சமரசம் ஆகியவை வேதநாயகத்தின் பண்பார்ந்த பழமையின் கருவில் ஊறிய புதுமைகள். தமிழ்ப் பெண்ணிதயங் கண்ட தமிழ் ஆடவரில், அவருக்கிணையாகக் கூறக் கூடியவர் இருபதாம் நூற்றாண்டில் நம்முடன் வாழ்ந்து புகழுலகெய்தியுள்ள திரு. வி. கலியாணசுந்தரனாரே. சமரசம் கண்ட தமிழருள்ளும் அவ்விருவர் இடமும் சிறிதல்ல. இப்பண்பு காரண

மாகவே திருவள்ளுவர் எச்சமயத்தினரென்று நாம் இன்னும் அறிய முடியவில்லை. இளங்கோவடிகள் இன்ன சமயத்தாரென்று உய்த்தறிவதுகூட எளிதன்று. இப்பண்பின் மரபு சிறிதும் வழுவாத செம்மல் 'வேதநாயகம். அவர் சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவரே. ஆனால் அவர் கிருத்தவர் என்பதை — கத்தோலிக்கக் கிருத்தவர் என்பதை — அவர் நண்பரும் அறிவர்; நாமும் அறிவோம். ஆனால் அவர் சமயப் பற்றுடன் இணையரும் சமய வேறுபாடு தடையல்ல என்று கூறுவது மிகை. சமய உணர்வற்றவர்கூட அவர் உணர்வில் பங்கு கொள்ளும்படி செய்யும் வன்மை அவர் சமயப் பண்புக்கும் கலைப் பண்புக்கும் உண்டு.

சமயங் கடந்த கடவுளுக்குச் சமயம் கடந்த சர்வ சமய சமரசக் கீர்த்தனை கண்ட பெரியார் அவர். அக்பர் காலத்தில் அவர் வாழ்ந்திருந்தால், அப் பாடலையே அக்பர் தம் அரசியல் கீதமாக ஆக்கியிருப்பார்!

பத்தொன்பதாம் நூற்றுண்டு புதுமையின் விடியற்காலம். பழமையின் இராமுடியும் தறுவாய். சிங்க நோக்காக அவர் பழமையிராக் கடந்து புதுமையின் பகலொளி கண்டார். அதுவே அவருக்குப் புதிய பகலவனொளியையுங் காட்டிற்று. அவர் பழமையில் வாழ்ந்தார். ஆனால் பழமைபேசித் திரியவில்லை. பழமையில் சில பண்புகளை நமக்கு நினைவு படுத்தி, புதுமைக்கும் வழி வகுத்தார் என்பது தான் அவர் அரும் புகழ்ச் சிறப்பு. அவர் கண்ட பழமை கம்பரைத் தாண்டி, தேவார திருவாய்மொழி தாண்டி, திருமூலர், மாணிக்க வாசகர் காலத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இவர்களையும் தாண்டிச் சங்க காலத்தை நம் கண் முன் கொண்டு வருகிறது. அதே சமயம் அவர் புதுமையோ பத்தொன்பதாம் நூற்றுண்டைத் துளைத்து இருபதாம் நூற்றுண்டுக்கு வழி வகுத்துள்ளது. இருபதாம் நூற்றுண்டு கடந்து இருபத்தொன்றும் நூற்றுண்டுக்கும் இங்குச் செல்ல முனைகின்றது.

தமிழகத்தில் புலவர் வளம் பெரிது. புலவர்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் ஒரு விசித்திரமான குறை ஏற்பட்டு விடுகிறது. புதிய புலவர் கள் நினைவு பழைய புலவர்களைச் சில சமயம் மறக்கடித்து விடுகிறது. பள்ளிப் பாடங்கள் இதை நினைவூட்டுகின் றன. அந்த வரிசையில் வேதநாயகம் பிள்ளையைச் சேர்த்துவிடக்கூடாது. ஏனெனில் அவர் புலவர்களுள் ஒருவர் மட்டுமல்லர். புலவர்களின் மரபையே ஆக்கிய புலவர்.

மாவட்ட நீதிபதியாக இருந்த ஒருவர் தொழில் புரிந்த நாளிலும் ஓய்வுபெற்ற நாளிலும் தமிழே நினைவாக தமிழறிஞரே தோழராக, தமிழ்ப் பண்பே உயிராக வாழ்ந்து, இவ்வளவு அழகிய பல்வகைப் பெருமையுடைய பாடல்களையும் நூல்களையும் ஆக்கித் தந்தார் என்றால், அது இன்னும் வியத்தகு செயலேயாகும். அவர் காலத் தில் இன்னும் அரியாசனம் ஏறாத தமிழை அரியாசனம் ஏற்றி உலக மவாவும் மொழியாக்கும் பணிக்கு அவர் கொடுத்த முதலூக்கத்திற்கு ஆக்கம் தரவும், அம்முறை யில் அவர் புகழ் நாட்டவும் நாம் முனைதல் வேண்டும்.

---

# வேதநாயகர் விழாத் தலைமையுரை

(ஓய்வு பெறும் மாவட்ட நீதிபதி
K. S. இராமசாமி சாஸ்திரியார் B.A., B.L.)

[சென்னை மயிலை இலட்சுமிபுரம் இளைஞர் சங்கச் சார்பில் 21-7-'55 அன்று நடைபெற்ற வேதநாயகர் முதல்நாள் விழாவிற்குத் தலைமை தாங்கி ஆற்றிய தலைமையுரை.]

திருச்சியில் சில ஆண்டுகளுக்கு முன்பு அன்பர்கள் இந்த வேதநாயகர் விழாவை நடத்தினர். அதில் நான் கலந்துகொண்டேன். மற்ற ஊர்களில் நடத்துவதை விட சென்னையில் நடத்துவதற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அந்த சிறந்த விழாவில் நான் தலைமை வகிப்பது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுகிறேன். செட்டியாரவர்கள் கூறியதைப்போல, என்னுடைய தந்தையார் அவர் பால் நல்ல எண்ணமும், சிறந்த அன்பும், சிறந்த பக்தியும் வைத்திருந்தார்கள். வேதநாயகர் சீர்காழியில் முனிசிப்பாக இருந்தபொழுது உ. வே. சுவாமிநாதய்யர் மூலமாக என்னுடைய தந்தைக்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது. சுவாமிநாதய்யருக்கு மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதினத்தார் ஆகியோரின் நட்பு காரணமாக இவரோடு தொடர்பு ஏற்பட்டது.

என்னுடைய இளம்பிராயத்திலேயே வேதநாயகர் சிறப்பைக் கேட்டு யான் மிகவும் சந்தோஷமடைந்து வந்தேன். அவரைப் பற்றி நான் அடிக்கடி பேசுவதும், நினைப்பதும் உண்டு. அவர் 1826-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதி பிறந்து இந்த ஜூலை மாதம் 21-ந் தேதி 1889-ம் ஆண்டு விண்ணுலகம் சேர்ந்தார். அவர் திருச்சியில் குளத்தூரில் பிறந்து சைவ மதத்திலிருந்து கிருஸ்துவ மதம் மாறின வமிசத்தில் பிறந்தவர். அவர் பாட்டனார் காலத்தில் அப்படி நிகழ்ந்துவிட்டது. வேதநாயகம் பிள்ளைக்கு இளம் பிராயத்திலேயே அபாரமான தெய்வ பக்தியும், தமிழ் மொழியிலும் இசையிலும் வன்மையும் உண்டு. போப்பைப் பற்றிக் கூறும் பொழுது: "He

lisped in numbers and numbers came" என்றும் கூறு வார்கள். அதைப் போலவே இவரும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார்.

அந்தக் காலத்தில் முனிசீப் வேலைக்கு ஒரு பரீட்சை வைத்ததாகத் தெரிகிறது. அதில் வெற்றியடைந்து வேலை பார்த்து வந்தார்கள். சீர்காழி, மாயவரம் முதலிய இடங்களில் முனிசீப்பாக சேவை செய்தார்கள். நீதிபதியாக இருந்தபொழுது வழக்குகளையெல்லாம் நன்முக அலசிப் பார்த்து விசாரித்து யாரும் குறை சொல்லக் கூடாத அளவில் தீர்ப்பு வழங்கியதாக அந்தக் காலத்து மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே பொது ஜனங்கள் அவரிடம் மிகுந்த மதிப்பும், பயமும், பக்தியும் வைத்திருந்தார்கள்.

அவர் அனேகம் தமிழ் நூல்களை இயற்றினுர். பெண் கல்விக்காக மிகவும் பாடுபட்டார். பிறர் சமய வெறுப்பு இன்றி அன்பு நெறியைப் பின்பற்றினுர். மொழியில் அன்பு வைத்திருந்தார். அன்பு வேறு; வெறி வேறு. அன்பு வரம்பு கடந்து சென்ருல் வெறியாக மாறுகிறது. அதை வெறி நிலையில் போகாமல் பார்த்து வருவோரே நல்ல அறிவாளிகள். வேதநாயகம் பிள்ளையவர்களுக்கு கிருஸ்துவ மதத்தில் நல்ல நம்பிக்கையும் சிறந்த பற்றும் இருந்தது. அதே சமயத்தில் மற்ற மதங்களில் வெறுப்பும் இல்லாத மனப்பான்மையுடையவர் என்பதை அவருடைய கீர்த்தனங்களே காட்டுகின்றன. அனேக தலைமுறையாக இந்து சமூகத்தில் இருந்து வந்துள்ளமையால் வேதாந்த சொற்கள் அவருடைய கீர்த்தனங்களிலே காணப்படுகிறது. "தியான நிஷ்டை" என்று ஓர் இடம் வருகிறது. அவருடைய சர்வ சமயக் கீர்த்தனை, நீதி நூல் முதலிய நூல்கள் எல்லோரிடத்தும் சகோதர பாவத்தோடு பழகவேண்டும் என்கிற கொள்கையை வற்புறுத்துகிறது. அவர் வேலையை விட்ட பிறகு சமூகத் தொண்டில் ஈடுபட்டார். முதியோர் கல்வி முதலிய சீர்திருத்

தத் திட்டங்களை மாயூரம் முனிசிபாலிடி தலைவராக இருந்தபோது செய்து வந்தார். நான் சிறுவனாக இருந்த பொழுது ஒரு பஞ்சம் வந்தது. ஈஸ்வர தாது வருஷத் துப் பஞ்சம் என்று அதைச் சொல்வார்கள். அந்த பஞ் சத்தில் தமிழ் நாடு தத்தளித்தது. அதை நினைத்துப் பார்க்க முடியாது. அத்தகைய கொடும் பஞ்ச காலத்தில் கஞ்சி தொட்டிகளை அமைத்து வேதநாயகம் பிள்ளை ஏழை களின் பசியை நீக்கினார். இது சரித்திரத்தில் சிறந்த பகுதியாகும். சில பேர் நூல்களில் பொது சேவையைப் பற்றி பிரமாதமாக எழுதி விட்டு தங்களுடைய வாழ்க் கையில் தங்கள் வயிற்றுப்பாட்டைக் கவனிப்பார்கள். ஆனால் வேதநாயகம் பிள்ளையவர்கள் எல்லோரிடத்தும் அன்பாக இருந்து பொது சேவை செய்து வந்தார்கள். இயல், இசை, நாடகம் நவீனம் இத்தனையும் ஒருவரிடத் தில் பொருந்தியிருப்பது அரிது. இத்தனையும் வேதநாய கம் பிள்ளையவர்களிடம் பொருந்தியிருந்தது. அவரு டைய நூல்களில் "சமரச கீர்த்தனை" எனக்கு மிகவும் பிரியமான நூல். நான் எப்பொழுதும் படிக்கும் நூல். அருகிலேயே வைத்துக்கொண்டே யிருப்பேன். அது என் தலைமாட்டிலேயே இருக்கும். அதை நீங்கள் எல் லோரும் படிக்கவேண்டுமாய் கேட்டுக்கொண்டு என் சிற் றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்!

# வேதநாயகர் விழாத் தலைமையுரை

(முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து)

[24-7-'55 அன்று சென்னை மாணவர் மன்றம், பெத்துநாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில் நடந்த வேதநாயகர் நினைவு நாள் விழாவில் ஆற்றிய தலைமையுரை.]

தமிழகத்திற் தோன்றிய பாவலரும் நாவலரும் பலர். அவருள் பலரைத் தமிழகம் மறந்துவிட்டது. அத்தகைய வித்தகருள் ஒருவர் மாயூரம் முனிசிப் வேதநாயகம் பிள்ளையவர்கள். தமிழன்பர்களாகிய நாமெல்லாம் வேதநாயகம் பிள்ளையவர்களை இத்தனை நாட்களாக மறந்திருந்தோம். நல்ல உறக்கத்திலேயுள்ள தமிழர்களைத் தட்டி யெழுப்பிட வேதநாயகம் பிள்ளையவர்களை நினைவூட்டிய இந்த விழாக் குழுவினருக்கு என் முதல் நன்றி உரித்தாகுக.

நாங்கள் வேதநாயகம் பிள்ளை விழாவினைக் கொண்டாடுகிறோம் என்று பலபேரிடம் சொல்லியபொழுது அவர்களெல்லாம் "வேதநாயகம் பிள்ளை யார்? அவர் என்ன செய்திருக்கிறார்?" என்று கேட்கத் தலைப்பட்டார்கள். நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்தபொழுதிலிருந்தே எங்களுக்கெல்லாம் வேதநாயகம் பிள்ளையவர்களைப்பற்றி தெரியும். அவர் இயற்றிய பிரதாப முதலியார் கதையைப் பெரியவர்கள் சொல்லக் கேட்டு நாங்களெல்லாம் விழுந்து விழுந்து சிரிப்போம். அவருடைய பாடல்களெல்லாம் எங்கள் பாடப்புத்தகத்தில் இருக்கும். அவர் இயற்றிய நூல்களில் தலைசிறந்த நூலாகிய "நீதி நூலை" இன்று யார் படிக்கிறார்கள்?

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சாதாரணமானவர்களுக்குச் சாற்றுகவி தரமாட்டார். "நந்தனார் கீர்த்தனை" என்னும் பாடலை கோபால கிருஷ்ண பாரதியார் பாடினார். அவர் நூலில் பல பிழைகள் இருந்ததால், தான் இதற்குச் சாற்றுகவி தர முடியாதென மறுத்து விட்டார். அதற்காக அவர் வீட்

டிற்குப் பலமுறை பாரதியார் அலைந்தார். ஒருநாள் அவர் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு பாடலை மிக உருக்கமாகப் பாரதியார் பாடிக்கொண்டு அவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அதைக் கேட்ட மீனாட்சிசுந்தரம் பிள்ளை "மிக நன்றாக இருக்கிறதே! என்ன பாட்டு?" என்று கேட்டார். நீங்கள் சாற்றுகவி தர மறுத்த "நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்" என்றார். உடனே "அப்படியா" சில தவறுகளைக் கொண்ட சாதாரணப் பாடல்களாயிருப்பினும் இசை அதையெல்லாம் மறைத்துவிடுகிறது" என்று இறுதியில் சாற்றுகவி தந்தார். இன்றைய சினிமா இசையைப் பாருங்களேன். அந்தப் பாடல் உரைநடையா! பாட்டுதானா என்பதே புரியாது. கொச்சையாக இருக்கும். பின்னணி வாத்தியங்களோடு பாடும்போது கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. அப்படிப்பட்ட மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வேதநாயகம் பிள்ளையை புகழ்ந்திருப்பது கொஞ்ச நஞ்சமல்ல. "வள்ளுவர் முதலிய பெரியவர்களே நீதி நூல் செய்யலாம். அப்படியிருக்க இவர் நீதி நூலைச் செய்யலாமா என்று கேட்கிறவர்கள், இதைப் படித்த பிறகு மற்ற நூல்களையெல்லாம் தள்ளி விடுவார்கள்" என்றெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருவள்ளுவர் எல்லா அதிகாரங்களுக்கும் பத்துப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். ஆனால் இவர் அப்படியல்ல. தகுதிக்கேற்ப 7, 5, 24 என்று பிரித்துப் பாடியுள்ளார். நீதிநூல் திருக்குறளுக்கு உரை போன்று அமைந்துள்ளது. திருக்குறளில் "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று கூறுவதைப் போல் இவரும் "ஆதி தேவன் அடியினை ஏற்றுவோம்" என்றே கூறுகிறார். திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அடுத்து வான் சிறப்பு, பிறகு நீத்தார் பெருமை என்று கூறிச் செல்கிறார். ஆனால் இவர் அதை மாற்றி மக்களுக்கு வேண்டிய வகையில் சொல்லு

கிருர். முதலில் தெய்வம்; பிறகு அரசாட்சி என்று வைக்கிருர். நல்ல அரசாட்சி இருந்தால் தானே குடிகளெல்லாம் நன்கு ஒழுக இயலும். அடுத்து அந்த நல்ல அரசாட்சியின் கடமை. அதன் பிறகு கல்வி, கல்வியில் "பெண்கல்வி" என்று தனி அதிகாரம் வகுத்துள்ளார். அதற்குப் பிறகு "சகோதரர் கடமை". இப்படியாக விளக்கிச் செல்கிருர். நீதித் தலைவராகிய இவர் நீதி நூல் செய்தது எவ்வளவு பொருத்தம்? இவற்றையெல்லாம் அரசாங்கத்தார் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கவேண்டும்.

கிருத்துவர் மரபில் வந்த வேதநாயகர் ஒரு வள்ளலார்; கருணீகார், நல்ல சைவர். அவர் ஜீவகாருண்யத்தைப்பற்றி சொல்வது மிகப் பொருத்தமானது. ஆனல் கிருத்தவராகிய வேதநாயகம் பிள்ளையவர்கள் ஜீவகாருண்யத்தைப் பற்றிச் சொல்வதனைப் படித்தால் அழுகை வந்து விடும்.

அவர் பாடாத பொருளே இல்லை. எல்லாவற்றைப் பற்றியும் அவர் பாடியிருக்கிருர். அவர் நீதிநூல், சமரச கீர்த்தனைகள் போன்று தனி நூல்கள் பாடியதோடல்லாது அவ்வப்போது பாடிய தனி பாடல்களில் சிலவற்றை 'தனிப் பாடற்றிரட்டு' என்ற நூலில் காணலாம். சிறந்த புலவர்கள் இயற்றிய பாடல்களே அந்நூலில் இடம் பெற்றுள்ளன.

வேதநாயகம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை (திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்) பார்த்துவிட்டு வந்து வீட்டில் ஒரு கடிதம் எழுதுகிருர்.

"சூர் வந்து வணங்கு மேன்மைச் சுப்பிரமணியதேவே
நேர் வந்து நின்னைக்கண்டு நேற்றிராத்திரியே மீண்டேன்
ஊர் வந்து சேர்ந்தேன் என்றன்உளம் வந்துசேரக்காணேன்
ஆர் வந்து சொலினும் கேளேன் அதனை இங் கனுப்புவாயே.

என்பதுதான் அந்த பாடல். இதுவும் தனிப்பாடற்றிரட்டில் இருக்கிறது. இதே கருத்துடைய கதை ஒன்று "சுதேசமித்திரனில்" அண்மையில் வந்தது. இப்படி இவருடைய பாடல்களை வைத்தே பல கதைகள் வெளி வந்துள்ளன.

வேதநாயகம் பிள்ளையவர்கள் "சூரிய கிரகண"த்தைப் பற்றிக் கூடப் பாடியுள்ளார். சுப்பிரமணிய தேசிகரை ஓர் ஒப்பற்ற சூரியனாக கூறுகிறது அந்தப் பாடல்.

குருவும் கிரணமும் கூடலால் கங்குல்
மிகுமென்று உளமே வெருவல் — நகுதுறைசைச்
செப்பரிய மாசுப்பிரமணிய தேசிகனும்
அப்பரிதி ஈங்குதித்த லால்.

என்பது பாடல். அமாவாசையுங் கிரகணமும் சேர்ந்தால் இருள் அதிகரிக்குமே யென்று மனமே பயப்படாதே! துறைசையில் வாழ்கின்ற சிறந்த மேன்மைகளையுடைய சுப்பிரமணிய தேசிகனாகிய சூரியன் இங்கு இருக்கும் போது உனக்கு என்ன பயம் என்பது அதன் கருத்து.

இன்று இந்த வேதநாயகர் விழா மாணவர் மன்றம் தமிழாசிரியர் கழகம், தாய்மார் கழகம் சார்பாக நடைபெறுகிறது. இந்த விழாவில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து வேதநாயகரைப் பாராட்டுகிறோம். ஆசிரியர், மாணவர், தாய்மார் ஆகிய மூவரும் இவ்வுலகத்தின் மூன்று முக்கிய அம்சங்கள். இந்த வேதநாயகர் விழாவின் பயனாக இங்கு வந்துள்ள ஆண், பெண், முதியோர், இளைஞர், புலவர், அறிஞர், மாணவர் அனைவரும் அவரின் அரிய நூல்களைப் படித்தால் தான் வேதநாயகர் புகழ் பரவ வகை உண்டு என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

---

# இசையுலகும் வேதநாயகரும்

(இசைப் பேராசிரியர் P. சாம்பமூர்த்தி B.A., B.L. அவர்கள்
(சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவர்.)

[சென்னை தமிழ் எழுத்தாளர் சங்க சார்பில் 23-7-'55 அன்று ஆற்றிய சொற்பொழிவு.]

ஒரு தேசத்தினுடைய சங்கீதம் உயிர் பெற்று வளர வேண்டுமானால் அந்த தேசத்தில் இசைப் புலவர்கள் பலர் தோன்ற வேண்டும். ஒரு தீபத்துக்கு, எண்ணெயோ, நெய்யோ வார்ப்பது போல் அவ்வப்போது நாம் செய்த புண்ணியத்தின் பலனாக இந்த பாரத தேசத்தில் பல வர்க்கேயகாரர்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் மரபில் வந்தவர் வேதநாயகம்.

வேதநாயகம் பிள்ளை சிறந்த வாத்தியக்காரருங்கூட என்பது அவரது சரித்திரத்திலிருந்து தெரிகிறது. கோபாலகிருஷ்ண பாரதியார் அவரது அத்யந்த நண்பர். அவருடைய சாஹித்தியங்கள் விசேஷ தன்மை வாய்ந்தவை. பெரியோர்களின் வர்ண மெட்டுகளை கேட்டவுடன் தட்சணமே அதேமுறையில் அமைத்து விடுவார்கள். அது எவ்வளவு சிரமமான காரியம் என்பது கொஞ்சம் சங்கீதம் பயின்றவர்களுக்குத் தான் தெரியும்.

வேதநாயகம் பிள்ளை ஒரு சிறந்த ரசிகர். இந்த நிகழ்ச்சி உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது. கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்னும் கீர்த்தனை நூலை இயற்றினார். அதைச் சுவையுடன் கதாரூபமாக கிருஷ்ண பாகவதர் என்பவர் அழகாக காலட்சேபம் செய்து வந்தார். ஒருநாள் கிருஷ்ண பாகவதரின் நந்தனார் காலட்சேபத்தை வேதநாயகம் பிள்ளை ஏற்பாடு செய்தார். அந்த காலட்சேபத்திற்கு கோபாலகிருஷ்ண பாரதியாரைக் கொண்டு வந்து ஒரு மூலையில் உட்கார வைத்தார்கள். கோபாலகிருஷ்ண பாரதியார் கடைசி 15 வருஷங்கள் அஞ்ஞாத வாசம் செய்வதைப் போல் ஒருவருக்கும் தெரியாமல்

சுற்றி வந்தார். அதனால் கிருஷ்ண பாகவதருக்கு கோபாலகிருஷ்ண பாரதியார் என்று தெரியாது. நேரில் சந்தித்துப் பேசியதே கிடையாது. காலட்சேபத்தைக் கேட்டு ஜனங்களெல்லாம் வெகு ஆனந்தப்படுகிறார்கள். காலட்சேப முடிவில் வேதநாயகம் பிள்ளை கோபால கிருஷ்ண பாரதியாரை மெல்ல அழைத்து வந்து கிருஷ்ண பாகவதர் முன்பாக விட்டுவிட்டார். கிருஷ்ண பாகவதர் Personality யால் தோற்றத்தோடு இருப்பார்கள். பாரதி யார் அஷ்டபூரண மகரிஷி போன்று இருப்பார். ஒரு வகை யோகம் தேகத்தை கடுமையாக வைத்துக்கொண்டு இருப்பார். இவர்தான் கோபாலகிருஷ்ண பாரதியார் என்றதும் பாகவதர் நடுநடுங்கி விட்டார். வேதநாயகம் பிள்ளை "கோபிக்க வேண்டாம்; இவர்தான் கோபால கிருஷ்ண பாரதி என்று உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டால் பிறகு நீங்கள் நந்தனர் சரித்திரத்தில் ரொம்ப அழகான நகாசு வேலையெல்லாம் எடுத்துவிட் டால் சுவைக்காது. அந்த அழகிய காலட்சேபத்தை பாரதியார் காதாரக் கேட்கட்டும் என்றுதான் சும்மா யிருந்தேன்" என்று சொன்னார். "நந்தனர் சரித்திரம் செய்தது தானா என்பதே சந்தேகமாயிருக்கிறது" என்று கோபாலகிருஷ்ண பாரதியார் சொன்னாராம்! இதை எதற் காகச் சொல்கிறேன் என்றால், வேதநாயகம் பிள்ளை பெரிய ரசிகர்.

இனி அவரின் சாஹித்திய புலமையினைக் கூறி இந்த உரையை முடிக்கிறேன். கோபாலகிருஷ்ண பாரதியார் தேவகாந்தாரி ராகத்தில் "என்ன ராமம் உன் தன் சன் னதி" என்னும் கீர்த்தனை செய்துள்ளார். அதே வர்ண மெட்டில் வேதநாயகம் பிள்ளையவர்கள் "எக் காலமும் உன்தன் பொற்கழல் பணிந்து கொண்டிருக்க நீ வரம் அருள்வாய்! என்று பாடிய பாடலைப் போன்றே அதே ராகத்தில் இவரும் ஒரு பாடலை எழுதியுள்ளார். ஒரே மாதிரி கீர்த்தனங்கள் செய்வது இழுக்கு என்று சொல்

வது தவறு — நல்ல வர்ணமெட்டுகள் எதுவாயிருப்பினும் அதைப் போன்றே பாடல்கள் செய்வதில் தவறு ஒன்றுமில்லை. பைரவி ராகத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் திருவாரூர் தியாகராசன் பெருமான், வேதநாயகம் பிள்ளை மூலம் ஒரே வர்ணமெட்டில் மூன்றழகிய கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்கள். அடாணு ராகத்தில் "முருகன் திருமால் மருகன் பெருமை" என்னும் அதே வர்ணமெட்டில்,

"ஈசரின் பொற்பாதமலர் நம்பினேன் என்னை இக்கணமே வந்து ரக்ஷணஞ் செய்தருளே!" என்று வேதநாயகம் பிள்ளை கீர்த்தனம் செய்துள்ளார். இன்னும் "நிதம் நிதம் உனையே தொழுதேனே!" போன்ற சில கவர்ச்சிகரமான வர்ணமெட்டுகளை யெல்லாம் வேதநாயகம் பிள்ளை அமைத்துள்ளார். இன்னும் கமஸ் ராகத்தில் மாதரை நினையாதே — நெஞ்சே (மாத) போன்ற பல கீர்த்தனைகளை பாடியுள்ளார். அவரை "Greatest Composer of Hithopathesa Kirthana" என்று சொல்லலாம். தமிழிசை ஓங்கவே கங்கணம் கட்டிக்கொண்டு பல கீர்த்தனைகள் செய்துள்ளார். சில அபூர்வ ராகங்களில் கிருதிகள் செய்துள்ளவை இன்று கிடைக்கவே இல்லை. இந்த வர்ணமெட்டுகளெல்லாம் கிடைக்குமானல், உலகிற்கு இன்றுள்ள துரதிர்ஷ்டம் தொலையும். 60, 70 வருஷங்களுக்குள்ளாகவே அவையெல்லாம் காணமற் போனது பரிதாபகரமான விஷயம். இதற்காக மூன்று, நான்கு பேர் சிரத்தை செய்து original வர்ணமெட்டுகளைத் தேடி பிரசுரம் செய்தால் இசையுலகிற்கு அதனல் பெரிய பிரயோசனம் உண்டாகும். அவை இருந்தால் தான் அவரின் Genius அறியவரும். அவர் என் பாடினர்? எந்த நோக்கத்தோடு பாடினர்? என்பவை யெல்லாம் அவரின் சொந்த பிரதியில் இருக்கலாம். தமிழ்ப் பாடல்களுக்கு Demand ஏற்பட்டுள்ள நாளில்சாஹித்தியத்திற்குரொம்ப பேர் சினிமா ட்யூன்களை பாடுகிறூர்கள்.

வேதநாயகம் பிள்ளையவர்கள் பாடிய கீர்த்தனங்களி லும் தைரியமாய் பல கருத்துகளை சொல்லியுள்ளார்.

“புண்ணியம் போல் பாபம் மனமே
புரிந்தோம் நாம் தினமே
திண்ணமாகக் குளிக்கப் போயுந் தன்மேலே
சேற்றைப் பூசிக்கொண்டு திரும்புதல் போலே (புண்.)

சரணம்

“கையிலே பிடிப்பது ஜெபமாலை
கக்கத்தில் வைப்பதுவோ கன்னக் கோலை
மெய்யாகத் தினம் படிப்பது தர்ம நூலை
மேலும் மேலும் நமக்கு துன்பமார்க்க வேலை. (புண்.)

இது சாமானியமாக வீட்டிலே பாடும் பாடல். இதைப் போல் எத்தனையோ பாடல்களில் நாட்டிலே நடக்கும் அநியாயங்களைக் கண்டித்துப் பாடியுள்ளார். பக்கத்தி லுள்ள மாயவரம் போன்ற ஊர்களில் கிழவர்களாகி இன் னும் இருக்கும் சங்கீத வித்வான்களிடம் சென்றால் உண் மையாக பல பழைய வர்ணமெட்டுகளுடன் கூடிய சாஹித் யங்கள் கிடைக்கும். இவைகளையெல்லாம் இப்போதே அரசியலாரோ அல்லது வேறு யாரோ ஒரு சின்ன கமிஷன் நியமித்து நாடாப் பதிவாவது (Tape Recording) செய்து வந்தால் தான் அவை யெல்லாம் காப்பாற்றப் படும் என்று நினைக்கிறேன்.

# தன்னேரில்லாத் தமிழ் வேதநாயகர்

(திரு. பி. ஸ்ரீ. ஆச்சரியா அவர்கள்)
சென்னை ஆனந்தவிகடன் உதவி ஆசிரியர்

[22-7-'55 அன்று சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு.]

மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன் 'சிப்பாய்க் கலகம்' நிகழ்ந்த காலத்தில் (கி. பி. 1857) தாரங்கம்பாடியில் முனிசிபாக இருந்து வந்தார்கள். முனிசிப் என்றால் நீதிபதி ஸ்தானத்தைப் போல அந்தக் காலத்தில் மதிப்பு அதிகம்; பொறுப்பும் அதிகம். அவர் நேர்மையாக நீதி பரிபாலனம் செய்து வந்தார். அதற்கு ஒரு பாடல் சான்று கூறுகிறது. பிள்ளையவர்கள் நேர்மையாக இருந்து நீதி வழங்க அருள் புரியுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறார்.

நானே பொதுநீதி தானே செலுத்திட
நல்ல வரம் அருள் கோனே.

வரும் வழக்கர் மனத்தை
வன் சொற்களால் சுடாமல்
மற்றைக் கீழ் உத்தியோகஸ்தர்
வம்புக் கிடங் கொடாமல்
தரும தேவதை ஞாய
தலந்தனில் நடிக்க
தப்பு சாட்சிகள் கிடு
கிடெனவே துடிக்க
இருமையகல் அநீதியே
ஓட்டம் பிடிக்க
இலஞ்சம் வாங்கிகள்
வெட்கத்தால் உயிர்மடிக்க

நானே பொதுநீதி தானே செலுத்திட
நல்ல வரம் அருள் கோனே.

இது தூய தமிழோ இல்லையோ உயிர்ச் சக்தியோடு கூடிய தமிழ்; பழகு தமிழ்; நல்ல தமிழ். இங்ஙனம் நேர்மையாய் இருந்ததினாலே அவர் உத்தியோகத்தை இழக்க நேர்ந்தது. கடைசியில் நூறு ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்து விலக்கும்படி அநியாயத் தீர்ப்பு தரப்பட்டது. அது ஒரு பெரிய கதை. ஆனால் வேலை நீங்கியவுடன்

“நீடும் எண்சாண் மெய்யை ஓர் சாண்
உதாம் நிமித்தம் விற்று
நாடும் அரசர்கள் அடிமை என்றே
முன்பு நாம் கொடுத்த
ஏடுகிழிபட்டதன்றோ உத்தியோகம் இழந்ததுவே”

என்று அடிமைச் சீட்டு கிழிந்து போய்விட்டது என்று மகிழ்ச்சியோடு பாடுகிறார் நீதிபதி. தமிழ் தெரிந்து கொண்டிருப்பதென்றால் அந்தக் காலத்தில் அது ஆச்சரியம் அல்லவா? அவர் நீதிபதியாவதற்கு முன்பு மொழி பெயர்ப்பாளராக இருந்தார். இங்கிலீஷ் பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் அவருக்குத் தெரியும். இதுவும் அவர் தமிழ் நடையை வளமாக்கியது. வேதநாயகம் பிள்ளையவர்கள் உத்தியோகத்தை வாய்ப்பாகக் கொண்டு இலக்கிய அறிவை சொந்த முயற்சியால் வளர்த்துக்கொண்டார்.

இவருடைய சிறப்பியல்பு என்னவென்றால், எதையும் நகைச்சுவையாகச் சொல்லுவார். அவர் கோர்ட்டில் ஓர் வணங்காமுடி ஆபீஸராக இருந்தானும். அவனைப்பற்றிக் கூறும்பொழுது, அவன் ஒரு இடத்திற்குச் செல்லும்பொழுது இறுமாப்புடன் வானைப் பார்த்து நடக்கிறதேயல்லாது நிலத்தைப் பார்த்து நடப்பதில்லை. அந்த இடத்து வாயிற்படி தலையில் இடித்தாலும் தலை குனியமாட்டான் என்றார். அடுத்து அதை விட நகைச்சுவையாக காலில் விஷம் தீண்டினாலும் குனிய மாட்டான் என்றார். அதாவது தங்கள் உயிரை விட அந்த கர்வம்தான் சிறந்தது என்கிற மனப்பான்மையோடு கூட இருந்தார்

கள் என்பதை நகைச்சுவையாக விளக்குகிறார். இது ஓர் உயிர்ச்சித்திரம். அடுத்தபடி அவர் எதிரே காலில் ஒரு வரும் செருப்பு போட்டுச் செல்லக்கூடாது. அவரைக் கண்டதும் மக்கள் சோட்டினை கழற்றும் வேகத்தினைப் பார்த்தால் அவர்கள் அதனால் அவரை அடிக்கத்தான் வரு கிறார்களோ என்று தோன்றுமாம்.

அவருடைய முனிசிப் அனுபவத்தைப் பற்றி எழுத எவ்வளவு வசனம் இருப்பினும் போதாது. அவரே சொல்லுகிறார் கேளுங்கள் ;

"சுப்பையரோ அபத்த மூட்டை — அந்தச்
சுந்தரையர் வழக்கிலே தொள்ளாயிரம் ஓட்டை
அப்பையர் கற்பிப்பார் பொய்ச்சீட்டை அந்த
அனந்தையர் கட்டுவார் ஆகாசக்கோட்டை"

இன்னும் வாதி, பிரதி வாதிகள் எப்படியிருக்கிறார்களாம்?

"அண்டப் புரட்டர் அந்தவாதி — அதி
லாண்டப் புரட்டன் அப்பா அவன் பிரதிவாதி
சண்டப் பிரசண்டன் நியா யவாதி நாளும்
சகஸ்திரப் புளுகன் சாட்சிக்காரனெனும் கியாதி"

அந்த ஓசை நயத்தினை கவனியுங்கள். இனி அவரின் இனிய ஹாஸ்யக் கவித்வ சக்தியினைக் காண்போம். கோர்ட்டில் வரும் பொய் வழக்குகளைப் பற்றிப் பாடு கிறார்.

"ககனப்பூ வந்திமகன் கொய்தானும் — அதைக்
கண்டு குருடன் அம்பால் எய்தானும்
செகமிசை ஊமையனும் வைதானும் — அதைச்
செவிடன் கேட்டு நகை செய்தானும்"

அற்புதமான கற்பனை! வேதநாயகம் பிள்ளையவர்கள் உத்தியோகத்தை வாய்ப்பாகக் கொண்டு இலக்கிய அறிவை சொந்த முயற்சியால் வளர்த்துக்கொண்டார். சைவ சித்தாந்தியான சுப்பிரமணிய சுவாமிகளுக்கும், கத்தோலிக்க கிருஸ்துவரான இவருக்கும் நட்பு அதிகம்.

சுவாமிகளைப் பார்த்து சந்தித்துப் பேசிவிட்டு ஊர் வந்து சேர்ந்தாராம். எப்படி வந்து சேர்ந்தார் :

"எருதுகள் முன்னே யிழுக்க என் மனம்
பின்னே யிழுத்தது."

என்று குறிப்பிடுகிறார். அடுக்குகிற மனோபாவம் இவரிடம் சிறந்து விளங்குகிறது. திருவாவடுதுறை சன்னிதானம் அவர்களை சந்தித்துப் பாடுகிறார் பாருங்கள் :

"நீர்நாடு வளத்திருவா வடுதுறைச் சுப்பிரமணிய நிமல கேண்மோ
கார்நாடும் பைங்கூழ்போல், கதிநாடு தொண்டர்கள்போல் கமழா நின்ற
தார்நாடு மதுகரம்போல் தாய்நாடு சேயினைப்போல் தயையின்மிக்க
சீர்நாடும் நின்சமுகம் நேர்நாடி வந்தனன் யான்தெரிந்து கொள்ளே."

கத்தோலிக்க கிருஸ்தவரோ சர்வதேச சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டு கீர்த்தனங்கள் எழுதினர்.

நலுங்குப் பாட்டு, சோபனப் பாட்டு முதலியவையெல்லாம் நாடோடிப் பாட்டுகள் போன்று கொச்சையாகப் பாடப்பட்டு வந்தன. அவற்றை இலக்கியமாக்கி கௌரவித்த பெருமை அவருக்கே உரியது. குறவஞ்சி, பள்ளு பாட்டு போன்று நலுங்குப் பாட்டு, சோபனப் பாட்டு முதலியவற்றில் இலக்கியச் சுவையைப் புகுத்திய பெரும் பணியை வேதநாயகம் பிள்ளை செய்திருக்கிறார். திரிகூட ராசப்பருக்குப் பிறகே குறவஞ்சியைப் பற்றி சிறந்த கருத்து நாட்டிலே உலவத் துடங்கியது. முக்கூடற் பள்ளு போன்றவை வளரும் தமிழுக்கு உயிர் தந்தன. இந்த வகையில் பாரதியாரும் ஒரு வழி காட்டியாக விளங்குகிறார். பிச்சைக்காரன் மெட்டினைக் கூடத் தம் பாடல்களில் கையாண்டுள்ளார். பாஞ்சாலி சபதத்தில் நொண்டிச் சிந்து போன்ற பாடல்களை அமைத்துள்ளார்.

இந்த வகையில் வேதநாயகம் பிள்ளை பாரதியாருக்கு வழி காட்டியாக விளங்கியிருக்கிறார். இன்னும் ஆதாரம் சொல்லவேண்டுமானால் பாரதியார் :

"தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வைய முழுதுமில்லை தோழி."

என்று கூறுகிறார். அந்த மறந்திருக்கும் — மறந்திருக்கும் என்று வரும் ஒழுங்கைக் கவனிக்க வேண்டும். வேதநாயகம் பிள்ளை சுப்பிரமணிய பாரதியாருக்கு முன்பாகவே

"கோவை மறைப் பொருளை எலாம் உணர்ந்திடுஞ்
சுப்பிரமணிய குருவே! வண்டு
பூவை மறப்பினும், வறியர் பொன்னை மறப்பினும், தமிழ்ஞல்
நூல் புலவர் எல்லாம்
பாவை மறப்பினும் கமலம் பகலை மறப்பினும், நேசம் பழுத்த
தொண்டர்
தேவை மறப்பினும், நினது சேவை மறப்பறியாது என்
சிந்தை தானே.

## தமிழ் அன்பும் வசன நடையும்

பாரதியார் வள்ளுவரையும், கம்பரையும் இப்பொழுது புகழ்ந்து பாடியிருக்கிறார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும், "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல்......" என்றும் பலப்பட பாடியுள்ளார். வேதநாயகம் பிள்ளையவர்கள் வசன நடையிலே கூறுகிறார் கேளுங்கள் :—

"திருவள்ளுவருடைய குறளை அவர்கள் வாணாளில் ஒருமுறையாவது பார்த்திருப்பார்களா? கம்பனுடைய கற்பனையைக் கனவிலும் கேட்டிருப்பார்களா? நாலடியார் செய்தவர்களின் காலடியையாவது கண்டிருப்பார்களா?"

மற்றும் அவர் தமிழைப் பற்றிக் கூறுகையில் "பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளைப் பயின்று விட்டு தாய்மொழியாகிய தமிழைப் பயிலாதவர்கள் மாதா வயிறெரிய மகேசுவரி பூசை செய்பவர்க்கொப்பா வார்" என்று கூறுகிறார். "நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்த தும் தமிழ், வீட்டு மொழியும் தமிழ், நாட்டு மொழியும் தமிழ்". தூங்குகின்ற தமிழகம் இதைக் கேட்டுவிட்டு "அடே வேதநாயகம் பிள்ளையே கூறியிருக்கிறாரே! நம் மைத் தூங்கவைத்ததும் தமிழ்!", என்று கூறும். "பேராசி ரியர் சுந்தரம் பிள்ளையும் சொன்னாரே! எல்லையறு பரம் பொருள் முன் இருந்தபடியே இருப்பது போல்" என்று, அதுதான் பாஷையினுடைய சட்டம். அதனுடைய முடிக் காதலுக்கு வேதநாயகம் பிள்ளையவர்கள் சென்றார் கள். அந்தக் காலத்து தமிழ் நடைகண்டு அவர் மனச் சான்று சொல்லுகிறது. அந்தக் காலத்து மக்கள் "துரைசாமி" என்பதைத் "தொரைசாமி" என்று சொல்லுவார்கள், "சுப்பிரமணியன்" என்பதை "சொக் கிரமணியன்" என்பார்கள், "வைத்தியலிங்கம்" என்பதனை "வயித்தியலிங்கம் என்றும் "வைத்துலிங்கம்" என் றும் கூடப் பெரிய மனிதர்கள் எழுதி வந்தார்கள். அதைப் பார்த்து "இந்த வித்வ சிரோன்மணிகள், ஜூரிகளாகவும், பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும் நியமிக்கப்படுகிறார் களே!" என்று வருந்திக் கூறினர். இந்தக் காலத்தில் அதுவும் போய் இந்நாட்டு மன்னர்களல்லவா அவர்களெல் லாம்.

ஒரு கோர்ட்டில் கட்சிக்காரர்கள் தமிழர்களாயிருந்து, வக்கீலும் நீதிபதியும் தமிழ் பேசக் கூடியவர்களாக இருப் பார்களானல் ஏன் வழக்கு தமிழிலேயே நடக்கக் கூடாது? என்று அவர் அந்தக் காலத்திலேயே கேட்டுள்ளார். அவர் வசன நடைக்குச் செய்த பெருந் தொண்டு பிர தாப முதலியார் சரித்திரத்தை நமக்கு அளித்துதவியது

தான். அதை நவீனமாகவும் வசன நடைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவும் கூறலாம். இறுதியாகப் பிரதாப முதலியார் சரித்திரத்திலுள்ள ஒரே ஒரு ஹாஸ்யத்தை மட்டும் கூற விரும்புகிறேன்:

### ஒரே காண்டத்தில் இராமாயணம்

பிரதாப முதலியார் சிறுவராக இருந்தபொழுது இராமாயணம் நாடகம் நடக்கிறது. பிரதாப முதலியார் சிலம்பம் பயின்றுவிட்டு சிலம்பக் கழியோடு நாடகத்திற்கு வருகிறார். கைகேயிக்கு கூனி உபதேசம் செய்யும் உணர்ச்சியான கட்டம் வருகிறது. பிரதாப முதலியார் உணர்ச்சி வசப்பட்டார். மேடைக்கு சிலம்பக் கழியோடு சென்றார். கைகேயிடம் சென்று இராமனைக் காட்டுக்குப் போக வேண்டாம் என்று சொல்லும்படி கேட்டார். மசியவில்லை. உடனே ஒரு அடி விழுந்தது. இராவணனுக்கும் ஒரு அடி விழுந்திருக்கவேண்டும். அனைவரும் இராமன் காட்டுக்குப் போக வேண்டாம் என்று ஒப்புக் கொண்டார்கள். நாடகமும் முடிந்தது. இராமாயணம், 6, 7, காண்டம் என்று பெரிதாகப் போகாமல், ராமனுக்கும் அவமானமில்லாமல் பாலகாண்டத்தில் அயோத்தியா நகரிலேயே ஒரே காண்டத்தில் முடித்துவிட்டேன் என்று கூறுகிறார். அந்த மாதிரி காரியம் இப்பொழுதும் சமீபத்தில் நடக்கிறது.

இப்படி நகைச்சுவை பொருள் பொதிந்ததாக இருக்கும். எனவே இனியாவது அந்த பிரதாப முதலியார் சரித்திரத்தை, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

# வாழ்வுக்கொரு வழிகாட்டி

சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., L.T.
(ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி)

(மயிலை இலட்சுமி புரம் இளைஞர் சங்க ஆதரவில் வேதநாயகர் விழாவில் ஆற்றிய சொற்பொழிவு :—)

அறிவுசான்ற தலைவர் அவர்களே!
மற்றைய பெரியோர்களே!
சகோதரர்களே! சகோதரிகளே!

வேதநாயகம் பிள்ளை போன்ற பல பெரியவர்களை நாமெல்லாம் அவசர உலகில் வாழ்வதனால் சிந்திக்க ஒழிவில்லை. நானுங்கூட 1950-ஆம் ஆண்டு வேதநாயகர் விழாவினில் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன். அப்போது அவரைப்பற்றி நினைத்து மகிழ்ந்தேன். ஐந்து வருடங்கள் ஆயின! போற்றத்தக்க அந்த பெரியாரை இன்றுதான் மறுபடி நினைக்கிறேன். பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தோன்றிய பெரியார்கள் பலப்பலர் கன்னித் தண்டமிழால் பலப்பல மேன்மை யடைந்தனர்; சிலர் வீழ்ச்சியும் அடைந்தனர்! வேதநாயகம் பிள்ளை காலத்தில் தமிழ் நிலை குலைந்திருந்தது. தமிழ் மடந்தை செல்வர்கள், அரசியலார் கண்ணிலே படாமல் வாழ்ந்து வந்தாள். துறசையாதீனம் சுப்பிரமணிய சுவாமிகளுக்கு வேதநாயகம் பிள்ளையவர்கள் எழுதிய ஒரு கடிதத்தில் இக் கருத்து பாடலாகக் காணப்படுகிறது. அக்கருத்து இதுதான்: "கருத்து மழைபோல் வாரி வாரி வழங்கும் வள்ளன்மை யுடையவராகிய சுப்பிரமணிய சுவாமிகளே! வெள்ளைக்காரன் தன் இங்கிலீஷ் பாஷையைப் பரவி விட்டு விட்டதனால், தளர்ந்து இருக்கின்ற தமிழ் தளிர்ப்பதற்கு நான் என்று கங்கணம் கட்டியுள்ளவரே!" என்று வருகிறது.

தமிழுக்குத் தாழ்ச்சி வாராமல் பெரு மக்கள் ஒவ்வொரு நூற்றுண்டு தோறும் தோன்றி தமிழைக் காத்து வந்துள்ளார்கள். அந்த வகையில் பத்தொன்பதாம் நூற்

ருண்டிலே வேதநாயகம் பிள்ளைக்கும் ஒரு இடமுண்டு. இராமலிங்க சுவாமிகள், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "இரட்சணிய யாத்திரிகம்" என்னும் நூலைச் செய்த பாளையங்கோட்டை H. கிருஷ்ணசாமிப் பிள்ளை, டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் முதலிய பத்து பேர் கொண்ட ஒரு கூட்டம் அந்தக் காலத்தில் இருந்து வந்தது. ஆதீனங்களில் அந்தக் காலத்தில் திருவாவடு துறை ஆதீனம் சிறந்து விளங்கியது. அப்படிப்பட்ட காலத்திலேயே தமிழுக்குத் தாழ்ச்சி என்றபோது நெஞ்சம் நோகிறது. அந்த நூற்றுண்டில் தமிழுக்காகப் பெரிதும் பாடுபட்ட ஒரு பெரு மகனாரின் நினைவு கூறுகின்றதை உன்னும்போது உள்ளத்துணர்வு உயர்கிறது. வாழ்க்கைத் தூய்மையடைகிறது. ஞான ஒளவை கூறினாரே "நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று; அவர் சொல் கேட்பதுவும் நன்று" என்று; அது என்றும் பொய்யா மொழி.

இன்று அவரது 66-வது ஆண்டு விழாக் கொண்டாடுகிறோம். அவர் பூத உடம்பில் இல்லாவிட்டாலும் புகழுடம்பில் இருந்து கொண்டு இதை யெல்லாம் பார்க்கிறார்கள். அறிவுத் திறன் கொண்டு அவரைப் பற்றி பேசுவதை யெல்லாம் கேட்கிறபோது சூட்சம உடம்பு செம்மை யடைகிறது. இந்த வகையில் அவரின் நினைவு நாள் கொண்டாடுவது போற்றத்தக்கது. பல்வேறு மக்களை ஒன்றுபடுத்த இத்தகைய விழாக்கள் பெரிதும் உதவும். ஜலவாயு குண்டிற்கு நடுங்கி அச்சமே அடிப்படையாய் பயந்து வாழ்கிற மக்கள் ஒரு பக்கம், தெய்வத் தன்மை மற்றொரு பக்கம். இவைகளுக்குள் போராட்டம். குடுகுடுப்பாண்டி நல்லது வராதா? என்று சொல்வானா என்று எதிர்பார்க்கும் மக்களைப் போல், உலகம் நல்லது வருமா? என்று ஏங்கி நிற்கிறது. இந்த நிலையில் வாய்மை, தூய்மை, அன்பு, அருள் குறைந்து வருகிறது. படித்தார் கூட்டமும் கூட இந் நிலைக்கு ஆளாகி

விட்டது. பெரிய நண்பரொருவர் மனம் வருந்தி "பொய்க் கணக்கு போகாதா? லஞ்சம் இல்லாமல் எதுவும் நடக்க மாட்டேன் என்கிறதே!" என்று பூசைக்கு போகிறபோது முறையிடுவதை நான் கண்டிருக்கிறேன்.

உலகம் கலப்பற்ற — சமயச் சார்பற்ற களங்கமற்ற அன்பைக் காணுததாகி வருந்துகிறது. களங்கமற்ற அன்பைக் காணுதவரை மனிதன் சுகமாக வாழ வழி "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்கிற உண்மையான ஒழுங்கின்படி நடப்பது தான். அப்போது தான் உலகம் செம்மைப்படும்.

கிருத்துவக் கூட்டத்தினர் தமிழைக் கற்று — தமிழ் சேவை புரிந்தே கிருத்துவ மறையை வளர்த்துள்ளனர். தமிழ் நாட்டில் நாய்க்கர் மன்னர் ஆட்சி தோன்றியபோது தமிழ்ப் பண்பாடு சிறிது குறைந்து, சமரச நெறி பரவலாயிற்று. அவர்கள் தமிழர்கள் பிற மதங்களில் சேரவும் இடந் தந்தார்கள். ஆண்டவனை வணங்கி அவன் அருள் மந்திரங்களைக் கேட்க இயலாத ஒடுக்கப்பட்ட ஜாதியினரெல்லாம் பிற மதம் புகுந்தனர். ஆனல் உயர்ந்த வேளாளர் மரபான கொங்குராயர் மரபில் தோன்றிய — அதாவது மூன்று மன்னர்க்கும் முடி சூட்டும் குலத்தில் பிறந்த வேதநாயகம் பிள்ளையின் பாட்டனருக்கு சூலநோய் கண்டது. ஆவூர் கிருத்துவப் பாதிரியார் ஒருவர் பிரார்த்தனை செய்து கொடுத்த மருந்தால் அந்நோய் முற்றும் நீங்கிற்று. அது காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாக அவர் கிருத்துவ மதத்தில் சேர்க்கப்பட்டார். வாழையடி வாழையாக அதுவே நிலைத்துவிட்டது. வேதநாயகம் பிள்ளை யவர்கள் பிறப்பிலே கத்தோலிக்க கிருத்துவர்; அவர் தமிழ்ப் புலமையை இளமையிலிருந்தே வளர்த்துக்கொண்டார். அவர் சமரச நெறியை இக்கால இளைஞர்கள் மனதைக் கவரவல்ல வகையில் அழுத்தமாக தெய்வத்தை பிற மதஸ்தர் அருவருப்பு அடையாத வண்ணம் பரப்பினர்.

திருவாவடுதுறை சன்னிதானம் இவர்களின் தமிழ்ச் சேவையைக் கேள்விப்பட்டு இவரைப் பார்க்க விரும்பி ஞர்கள். ஆனல் இவரது உத்தியோகம் மிகவும் கடின மானது; ஓய்வு ஒழிச்சல் இல்லாதது! தஞ்சாவூர் செழிப் பான நிலமாகையால் வழக்குகளும் செழிப்பாகவே இருந் தன! எனவே வந்து பார்க்க முடியாமைக்காக வருந்தி ஞர். அதைக் கேட்ட சுவாமிகள் நாமே போய்ப் பார்ப் போம் என்று மாயூரம் மடாதிபதியின் மடத்தில் தங்கி விட்டு, "இதற்கு மேலும் வர சன்னிதானம் இடம் தரவில்லை" என்று எழுதினர்கள். அதைக் கேட்ட வேத நாயகர் "இல்லை இல்லை நானே வருகிறேன்," என்று சென்று பார்த்தார்கள்! இந்த பெரியதோர் உண்மையை உயிர்கள் போகிற நிலையில் மதகுருக்கள் பின்பற்றலா காதா? உலகமே அவரது சமரச நெறிக்கு சாட்சி சொல்லும். கத்தோலிக்க கிருத்துவரை இந்துமத மடாதி பதி பார்த்து அளவளாவுகிருர்! என்ன விந்தை!

வேதநாயகம் பிள்ளையவர்கள் நீதி நூல் என்ற அரு மையானதொரு நூலை 400 பாடல்களால் செய்தார்கள். மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க அதில் 200 பாடல் பின்னை சேர்த்து 600 பாட்டுகளாக வெளி யிட்டார். அதில் பல அருமையான செய்திகள் சொல்லி யிருக்கின்றன.

"போலிக் குருவின் தன்மை" யைப்பற்றி கூறுங்காலே,

"வாயில் தேனுந்தன் வாலிற் கொடுக்குஞ்சேர்
ஈயின் வாயினி லிங்கிதச் சொல்லொடுந்
தீய செய்கையு ளானைத் தினஞ்சிறு
சேயும் எள்ளுந்தன் சிந்தையும் எள்ளுமே!"

என்று கூறுகிருர். சிறு பிள்ளையும் வாயில் தேனும், வாலில் கொடுக்கும் வைத்துள்ள தேனீ போன்ற ஆசிரி

யரை எள்ளுவானும். இனி லஞ்சத்தைப் பற்றிக் கூறு கையில்,

"ஏதுக்கோ வாங்குகிறீர் லஞ்சம் உமக்
கிதைவிட வேறுண்டோ பஞ்சம்? (உமக்கு)
வாதுக்கு வினே வழக்குரை பேசி
வாங்குகிறீர் என்ன பிழைப்பிது சீச்சீ!"

என்று பாடுகிறார். இப்படி அனேகம் பாடல்களை நேர்மையாக எழுதியுள்ளார். துன்பந் தந்த துரைகளிடத்தும் சகிப்புத் தன்மையைக் காட்டியுள்ளார். மீனட்சி சுந்தரம் பிள்ளை காலமாகியதும் அவரது குடும்பத்திற்கு தான் சாகும் வரை ஆதரவு அளித்து, அவர் பிள்ளை ஒருவனுக்கும் தன் ஆபீசிலேயே உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். சொல்லும், செயலும், சிந்தையும் ஒன்றி வருங்காலத்திற்கு வழிகாட்டியாக விளங்கிய அவரைப் போல வாழ முயற்சி செய்ய வேண்டிக்கொண்டு அவருக்கு என் வணக்கத்தைச் செலுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

# குடியரசுக்கு அடிகோலியவர்

(திரு. சரவணபவானந்தர்)

அற்புத மேதையாய் பொற்புறு புலவராய்ப் பிறந்தவர் விற்பன்னர் வேதநாயகத் தமிழ் வேந்தர். திருச்சபை போற்றும் கத்தோலிக்கச் செல்வர். கனமிகும் கருணைக் கவிஞர். ஈடும் எடுப்பும் இல்லாத இசையறிஞர். நல்ல நீதியை நாளும் வளர்த்தவர். அவர் செய்துள்ள பாடல்கள் பல்லாயிரம். புரட்சிகரமான நிலையை முதன் முதல் புகுத்தியவர் நமது வேதநாயகர்தான். தமிழ் இசைக்கு ஏற்றம் வழங்கினார். வசன முறைக்கு வழி காட்டினார். பெண் இனத்தைக் கண் இனமாக மதித்து பெருமை கொடுத்தார். மாதர்கள், ஆட்சி செய்யும் மாண்புடையவர்கள் என்பதை விளக்கி வைத்தார். இலஞ்சப் பேயைப் பஞ்சாய்ப் பறக்கடித்தார். பஞ்சக் கொடுமையினால் பரிதவித்த பல்லாயிரம் மக்களுக்கு நல்லுதவி நல்கினார். இன்று சொல்லும் சமத்துவ நிலைக்கு அன்றே ஒரு இலக்காய் இருந்து சமரசத்தை விமரிசையாய் விளக்கி வைத்தார். அதற்கான பல நல்ல பாடல்களையும் பாடிக் குவித்தார். இறுதியாக நமது தமிழ் நாட்டில் ஆங்கில ஆட்சி தலை விரித்தாடிய காலத்தில், தான் ஒரு அரசியல் அதிகாரியாக இருந்தும் தமிழர் தன்மானத்தை எண்ணி தான் பிறந்த நாடு தமிழ் நாடுதான் என்பதை உன்னி, எந்தெந்த வகையில் தமிழுக்கு ஏற்றந் தரவேண்டுமோ அந்தந்த வகையிலெல்லாம் அழகு அழகாக செய்திருக்கின்றார். அதற்கொரு சான்று, அவர் எழுதிய பிரதாப முதலியார் என்னும் தனித் தலைமைத் தமிழ் நாவல் நூலாகும். அதில் ஞானம்பாள் என்ற மாதுமணியை கதா நாயகியாக சிருஷ்டித்து அவள் வாக்கினால் நல்ல புத்தி புகட்டியிருக்கின்றார்.

* * * * *

இன்று 'தமிழ் நாடு தமிழருக்கே', 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றெல்லாம் வான் பிளக்க பலப்பல கூட்டங்கள் கோஷிக்கின்றனவே, அதற்கெல்லாம் அடிப்படையாக, ஆரம்பமாக, அன்று ஞானம்பாள் வாயிலாக நமது நாயகர் தமது நாவலின் மூலம் கோஷித்த கோஷமே தவிர இன்று இது ஒன்றும் புதிதல்ல. மற்றும் நாட்டை மொழி வாரியாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்து அந் நாவலில் இடம் பெற்றுள்ளதை நாம் ஆராய்ந்திருக்க வேண்டும். தமிழுக்குப் புத்துயிர் தந்து, அன்னிய மொழி அறவே வெறுத்தவர் நம் நாயகர். ஆட்சி முறைக்கு மாட்சி அளித்தவர் நமது நாயகர்.

* * * * *

நமது விற்பன்னர், 'பிரதாப முதலியார்' நூலை 1876-ம் ஆண்டு எழுதி முடித்தார். அதன் பிறகு 9 ஆண்டுகள் கடந்து அதாவது 1885-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 தேதிகளில் முதன் முதலாக காங்கிரஸ் மகாசபை மாநாடு பம்பாயில் கூடியது. அது சமயம் 'சுயராஜ்ஜியம்' என்ற சுதந்திரச் சொல்லை யாரும் சொல்லவேயில்லை. அதன் பிறகும் பல சபைகள் கூட்டப்பட்டன. அப்போது அனேக தீர்மானங்கள் ஆங்கிலேய அரசாட்சியைப் புகழ்ந்தே நிறைவேற்றப்பட்டன.

* * * * *

இனி, நமது நாயகரின் நல்லுரையைக் கேளுங்கள்.

"தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியதை உடையவர்கள் அல்ல. அவர்கள் எந்த ஊர் பாஷைகளை படிக்கிறார்களோ அந்த ஊரே அவர்களுக்கு தகுந்த இடமாகையால், சுய பாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ்மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்

துக்கு அனுப்பிவிடுவோம். பிரெஞ்சுமட்டும் படிப்பவர்களை பாரீசுப் (PARIS) பட்டணத்துக்கு அனுப்புவோம்; லத்தீனுக்கும் (LATIN) சமஸ்கிருதத்துக்கும் சொந்த ஊர் இல்லாதபடியால் அந்த பாஷைகளைப் படிப்பவர்களை அநாம கரணத்தீவுக்கு அனுப்புவோம்.''

* * * * *

இப்படியாக நமது வேதநாயகர் தான் பிறந்த ஜன்ம பூமியாகிய தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும், எவ்வளவு அழுத்தமான மனப்பான்மையோடு பேசியிருக்கின்றார் பாருங்கள். சுருக்கமாகச் சொன்னால், ஆங்கில ஆட்சி முறை மாறி, தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி தலையெடுக்க வேண்டும், அது தழைத்தோங்க வேண்டும், அது சார்ந்து, நீதி மன்றங்களில் தமிழ் மொழியிலேயே சட்ட திட்டங்களும் அமைக்கவேண்டும். வழக்கறிஞர்களும், வாதிப் பிரதிவாதிகளும் தமிழிலேயே எதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். தேசத்தில் சுதந்திர ஒளி பிரகாசிக்கவேண்டும் என்று வருங்காலம் உணர்ந்த வைரமணிப் புலவராக அன்றே வாரி வழங்கியிருக்கின்றார்.

* * * * *

1905-ம் ஆண்டில் 21-வது காங்கிரஸ் மகாசபை கூடியது. இதற்குத் தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே. Council of the secretary of the State-ல் அதிக இந்தியர்கள் இருக்கவேண்டும் என்னும் ரகசிய முடிவு செய்தபிறகு 1906-ல் 22-வது காங்கிரஸ் மகாசபை கூடியது. அதற்கு தலைமை தாங்கியவர் தாதாபாய் நௌரோஜ். அந்த சமயந்தான் 'சுயாட்சி' ஏற்பட்டால் நாட்டுக்கு நல்லது என்ற ஒரே ஒரு வார்த்தை கிளம்பிற்று. ('Once self Government is obtained there will be Prosperity enough for all but not until then') இதிலிருந்து முன்

பின் நிகழ்ந்த விஷயங்களை வைத்து ஆண்டுகளை கணக்கெடுத்து பார்த்தால் நமது வேதநாயகரின் வீர உரையின் விளக்கமும் வெற்றியும் மிக நன்ருக விளங்கும்.

* * * * *

மதச்சார்பற்ற பொதுநெறிக் குடியாட்சியே நமது இந்தியாவுக்கு வேண்டற்பாலது என்பதே நமது நாயகரின் முக்கிய கருத்தாகும். அரசியலைப் பற்றிய ஒரு தெளிந்த நுணுக்கம் வேண்டுமென்ருல், நமது நாயகரைத் தான் கேட்கவேண்டும். முறையோடு மொழிந்தவர். இன்றைய குடியாட்சிக்கு அடி கோலியவர். வேதநாயகரை இந்திய விடுதலை வீரர் என்று சொன்னுல், அது இன்றைக்கு ஒரு சிலருக்கு வியப்பாக யிருக்கலாம். ஆனுல், 78 ஆண்டுகளுக்கு முன்னே பிறந்த பிரதாப முதலியாரைப் பார்த்தால் பேராச்சரியமாக யிருக்கும். குடியாட்சி, சுயாட்சி, சுதந்தரம் என்ற, சொற்களையெல்லாம் முறைப்படுத்தி மொழிந்தவர் நமது நாயகர். நாயகரின் வார்த்தையில் சீர்திருத்தக் கருத்துக்கள் திகழ்வதை காணுங்கள். நீதி நிர்வாகம் வேண்டுமா? வருங்காலத் திட்டங்கள் வேண்டுமா? இன்றைக்கிருக்கின்ற எதிர்ப்புகளுக்கு ஆதாரங்கள் வேண்டுமா? யாவும் ஒருங்கே சொல்லியுள்ளார். கூட்டணி முயற்சியைக் கூறியுள்ளார் சமத்துவத்தின் தத்துவம் தந்துள்ளார். தமிழின் பெருமையைப் பிரகாசிக்கச் செய்திருக்கின்ருர். நமது மதிமேதை வேதநாயகர் அன்று சொன்ன அத்தனையையும், இன்று இருக்கின்ற நாட்டின் நிலவரத்தையும், குடியாட்சியின் மாட்சியையும் ஒரு சிறிது நுண்ணி, எண்ணி பார்ப்போமேயானுல் குடியாட்சிக்கு அடிகோலிய பெருஞ் சிறப்பு அவருக்கே உரியதாகும் என்பது மிக நன்ருக விளங்கும்.

# அறவழி காட்டிய அன்பன்

(வித்துவான் வீ. ப. நடராஜன், பசுமலை)

இந்த இருபதாம் நூற்றுண்டில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலோர் மாயூரம் நீதிபதி வேதநாயகம் பிள்ளையென்று சொன்னுல் அறிந்து கொள்வர். அவ்வாறு அவரை அறியும்படியாக அவர் இயற்றிய சர்வ சமரசக் கீர்த்தனைகள் என்னும் பாடல்கள் தமிழ் நாட்டிற் பரவி அவரை அறிமுகப்படுத்தின. அப்பாடல்கள் எம்மதத்தாரும் இறைவனை நோக்கிப் பாடி அவரருள் தேட வழிகாட்டுகின்ற காரணத்தால் பலர் அதை நாடோறும் பாடுகின்றனர். கேட்கின்ற மக்களோ இப் பாடல்களில் அமைந்து கிடக்கின்ற எதுகை, மோனை, யாப்பமைதி, சொல்லழகு, கருத்து, நகைச்சுவை அனைத்தையும் அறிந்து பாட்டுப் பாடியவர் வேதநாயகம் பிள்ளை எனத் தெரிந்து கொண்டு, அப் பாடலாசிரியரை தம் மனத்துள் ளிருத்துகின்றனர். இக் காரணத்தாலேயே இன்று பலர் அவர் பெயரை யறிய முடிந்தது. ஆனல் இவ்வாருக சர்வ சமயக் கீர்த்தனை எழுதி எல்லா மதத்தைச் சார்ந்த மக்களுக்கும் தொண்டு செய்த இப் பெருமகனுர் அனைவரும் அற வழியில் நிற்குமாறு நீதிநூல் ஒன்று 'நீதிநூல்' என்ற பெயராலேயே எழுதிப் போந்துள்ளார். அறிஞர் பலர் அதை அறிவர். ஆனுல் எல்லா மக்களும் அந்நூலை அறிந்தால் நூல் செய்த ஆசிரியரின் பெருந்தகைமையை யறியவும், அவருக்கு நன்றி செலுத்து முகத்தால் அவ்வற வழி நின்று நல்வாழ்வடையவும் துணை செய்யும்.

நீதிநூல் எளிய தமிழ் நடை கொண்டுள்ளது. மதச் சார்பற்றது. அற வழிகள் நிறைந்தது. அனைவருக்கும் பொதுவான வரையறுத்த நீதிகள் உணர்த்தப் பெறுகின்றன. இனிய, எளிய உவமைகள் இடம் பெற்றுள்ளன. ஆங்காங்கு நகைச் சுவைகளும் காணக்கூடியன. விருப்பு

வெறுப்பின்றி நீவழிகள் வேராறுக்கப்பட்டுள்ளன. மக்களே மக்களாக வாழ வழி வகுக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியினழகை எடுத்துக்காட்டுகின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து தமிழ்த் தாய்க்குப் புதியதொரு மாலே யெனலாம். அப் பகுதியினின்றும் ஓரிரண்டு கண்டால் வேதநாயகரின் விழுமிய நிலே உணரலாகும்.

கடவுளைக் கண்ணல் காண இயலாதெனவும் ஆயினும் உணர்தல் கூடுமெனவும் காட்டுகிருர். மரங்கள் அசையும் போது காற்று வீசுகிறதெனவும், புகை கண்ட விடத்துத் தீ யுண்டெனவும், நன் மணம் கமழ்கின்ற இடத்தில் மலர் உண்டெனவும் கண்ணுற் காணுவிடினும் உணர்வது போல இவ்வுலகமே இயங்குகின்றதால் இறைவனுண்டென விளக்குகின்ருர்.

“மாமுதலசைதலாற் காலுளதென மதிப்பாரெங்கும்
பாவிய புகையாற் செந்தீயுளதெனப் பகர்வார்
சுற்றும்
விரவிய மணத்தாற் பாங்கர்வீ யுளதெனத் தேர்வார்
பானுள் னென்னு முண்மைக்குப் பாரெலாஞ் சாற்று
மன்றே”.

உயர்ந்தோர் நற்பண்புகளுடன் விளங்கினுலன்ருே தாழ்ந்தோருக்கும் அன்னூர்பால் அருளுண்டாகும். எனவே, உயர்ந்தோர் பண்பைப் பல சான்றுகளால் காட்டுகின்ருர்.

உடலில் பல உறுப்புக்கள் உள்ளன. அவை அனைத்துங்கூடி இயங்க வேண்டும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத் தொழிலேச் செய்கிறது. அனைத்தும் இன்றியமையாதன. அவற்றுள் உயர்வு தாழ்வு கிடையாது. எனவே, மேல் கீழென்ற பாகுபாடின்றி ஒன்றுக்கொன்று உதவி இயங்குகின்றது.

மலை மிகப் பெரியது. உயர்ந்து விளங்குகின்றது. தனக்குக் கிடைக்கும் நீரைத் தனது பாதத்திலுள்ள மண் தரைக்குப் போகுமாறு ஓடச் செய்து உதவுகின்றது.

இவ்விரண்டு உவமைகள் போலவே அறிவிற் பெரியோர் தம்மிடம் உள்ள நிதிக்குவியல் யாவும் தாழ்ந்தவர் கட்குக் கொடுக்கவென்றே இறைவன் தம்பாலளித்துள்ளான் எனக் கருதுவர் எனப் பாடுகிறார்.

"உடலுறுப்புக்கள் மேல் கீழென்றுன்னிடா தோம்பல் போலும்
தடமலை கொண்ட நீரைத் தாழ்தரைக் களித்தல் போலும்
தொடர்புறு மேலோர் தங்கைதோய் நீதி யாவுந் தாழ்ந்மோர்க்கு
இடவெனக் கடவுளீந்தானென நினைந்திடுவர் மாதோ".

மேட்டிலின்று தண்ணீர் பள்ளத்தை நோக்கி ஓடுகின்ற செயலைக்கூட, தன்னை விடத் தாழ்ந்த இடத்திற்கு தண்ணீரை அனுப்பி மேடான இடம் உதவுவதாகப் பாட்டில் காட்டியிருப்பது கவிஞரின் கற்பனைத் திறனுக்கோர் சான்று.

என்றைக்கும் நாம் உணர்கின்ற காற்று, தீயினின்று கிளம்பும் புகை, மணம் வீசும் பூ, மேட்டினின்றிரங்கும் நீர், இவற்றையெல்லாம் நாமனைவரும் பார்த்தும் உணர்ந்துமிருப்பினும் எங்கு எவற்றிற்கு உவமை யாக்கலாம் எனச் சிந்திப்பதில்லை. உயர் கவிஞர்களினுள்ளமே இத்தகு நுண் பொருட்களையும் நுணுகி யாய்ந்து இன்ன விடத்துக்குரியன இவ்வுவமைகளெனத் தேர்ந்து எழுதி வைக்கும் ஆற்றல் பெற்றுர்கள். அத்தகு கவிஞரே நம் வேத நாயகர்.

அன்றியும் சங்ககாலந் தொட்டுத் தோன்றிய இலக்கிய நூற்களுள் காணக்கிடக்கின்ற எண்ணிலா உவமைகளை யெல்லாம் விடுத்துத், தான் இன்று தன்னைச் சுற்றி நிகழ்கின்ற எளிய நிகழ்ச்சிகளையே கவிகளின் உவமையாக்கிக் காட்டுதல் இவரது தனிப்பட்ட ஓர் திறனைப் புலப்படுத்தும். இவ்வாறான இப்புலவர் பெருமான் எக் காரணம் பற்றி இந்நாள் வரை போற்றுவாரன்றி, போற்றினும் அப் புகழ் பரப்புவாரில்லை என அறிந்து கொள்ள இயலவில்லை.

ஆதலின் இளைஞர்கள், பெரியோர்கள், அறிஞர்கள் ஆகிய அனைவரும் நீதி நூலினை நுணுகி விருப்பு வெறுப்பின்றி யாய்ந்து அதனைத் தமிழ் மக்களிடையே நிலவுமாறு செய்தலே தமிழ் கவிஞர்கட்கு இன்று செய்யும் தொண்டாகும்.

நீதிநூல் வாழ்க!

# நினைவுகூர் சின்னங்கள் வேண்டும்!

மதுரை, தமிழ்ப் பேராசிரியர், ஆ. கார்மேகக்கோன்

குளத்தூர் விளங்கத் தோன்றிய நம் தமிழின் விளக்கம், மாயூரம் கண்டு மகிழ்ந்த கலை விளக்கம் நம் வேத நாயகனார் மறைந்து அறுபத்தேழு ஆண்டுகள் ஆகின்றன.

நீதிநூல், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி, பெண்மதிமாலை, பெண் கல்வி, பெண் மானம், சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள், சித்தாந்த சங்கிரகம், சோபனப் பாடல், தனிப் பாடல்கள், திருவருண்மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவ தோத்திர மாலை, சத்திய வேதக் கீர்த்தனைகள், பெரிய நாயகியம்மைப் பதிகம் முதலிய நூல்களை ஆக்கி, தமிழ் இலக்கியத்தில் புதுமை செய்வித்த இச் செந்தமிழ்க் குரிசிலின் நினைவு விழா மீண்டும் தொடங்குகிறது, இந்த ஜூலைத் திங்களிலே!

நம் நாட்டில் வாழ்ந்து மறைந்த புலவர் பெருமக்களுக்கு மணிமண்டபம் முதலிய நினைவுச் சின்னங்கள் எழுப்பியும், இப்போது வாழும் கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும், கேடயம் வழங்கியும் மகிழ்கின்றது இன்று நமது தமிழினம்! ஆனால் இறந்தும் இறவாமல், மறைந்தும் மறையாமல் பொறி உடல் கரந்தும் புகழுடல் கரவாமல் நிறைந்தும், திகழ்கின்ற நம் வேதநாயகனாருக்குத் தமிழ் நாடு, அவரது தமிழ்ப் பணிக்கு நன்றியாக என்ன செய்துள்ளது!

20-ம் நூற்றுண்டில் வாழ்ந்த கவிஞர் பாரதியாருக்கும், தமிழ்ப் பெரியார், உ. வே. சுவாமிநாதையருக்கும் நினைவுச் சின்னங்கள் நிறுவிய தமிழகம், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் நன்கு மதிக்கப்

கப் பெற்ற தமிழ்ப் பெரும் புலவர், சட்டத்துறை அறிஞர், மாவட்ட அறங்கூறவைத் தலைவர், இலக்கணப் பெருங் கடல், இசைக் கோமான், கொடை வள்ளல், உரை நடைப் புதுமைச் சிற்பி, இலக்கிய மேரு, பல்கலைக் குரிசில், கவி சாகரம், என்றெல்லாம் போற்றப் பெறும் வேதநாயகனு ரைத் தமிழகம் மறந்தது ஏனோ? இது நெறியோ?

புலவர்கட்கன்றிப் பொது மக்களுக்குப் பெரிதும் பயன் படாத உரை நடையே வழக்கிலிருந்த அன்று, எவருக் கும் புரிய, இனிய எளிய நடையில், தமிழ் மொழியில், முதற் புதினம், (நாவல்) பிரதாப முதலியார் சரித் திரத்தை 1876-ம் ஆண்டிலேயே எழுதி, இன்று வாழும் மறுமலர்ச்சிப் புதுமைக் கலைஞர் அனைவருக்கும் புத்திலக் கிய மாளிகைக்குப் படியமைத்துத் தந்த நவயுகச் சிற்பி நம் வேதநாயகனாரை நாம் மறந்தது மாண்பாகுமோ?

வேதநாயகனார் வேறு பணி அற்றுப் பிழைப்பிற்கு வழி தேடத் தமிழ் இலக்கியம் படைக்கவில்லை. மதிப்புக்குரிய மக்கள் தொண்டராக, சிறப்பு நிறைந்த அரசியல் நீதிபதி யாக, வறுமையின்றி வாழ்ந்தவர். ஆங்கிலப் புலமையும், அகன்ற அறிவாற்றலும், பரந்த நூலறிவும் நிரம்பியவர். வாடி நின்ற தமிழ்ப் பயிர்க்கு வான் மழையாக வந்து பொழிந்து புத்தம் புது சோலையமைத்தவர். அன்றியும் புதுச் சாலையும் அமைத்தவர். தமிழகத்து இலக்கிய எழுச்சியின் புதுமைக் குரலாக, விடிவெள்ளியாக, வழி காட்டியாக வாழ்ந்தவர் அவர்.

இந்திய நாட்டில் சுதந்திரம் என்ற சொல்லைச் சொல்ல அறியாத காலத்தில் அதாவது 18-ம் நூற்றுண்டின் இறு திக் காலத்திலேயே ஆங்கில ஆட்சி முறை மாறி, தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி தலையெடுக்க வேண்டும், அது தழைத்தோங்க வேண்டும், அதனைச் சார்ந்து, நீதி மன்றங்

களில் தமிழ் மொழியிலேயே சட்ட திட்டங்களும் அமைய வேண்டும். வழக்கறிஞர்களும், வாதிப் பிரதிவாதிகளும் தமிழிலேயே எதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். தேசத்தில் சுதந்திர ஒளி ஒளிரவேண்டும் என்று நாட்டின் வருங்கால நிகழ்ச்சிகளையெல்லாம் காலத் திரைகளை ஊடுருவித் தமது அகக் கண்ணால் கூர்ந்து நோக்கி முன்னரே எடுத்துரைத்து வருங்கால மக்களுக்கு சுதந்திர வேட்கையை உண்டுபண்ணிய சீர்சால் இருடியாவர் நம் போத நாயகராம் வேதநாயகர்.

தமிழகத்தில் சாதி சமய வேறுபாடின்றி மக்கள் யாவரையும் ஒரு தாய் வயிற்று மக்களாகக் கருதி, எவரும் ஆற்றவொண்ணுத் தமிழ்த் தொண்டாற்றிய இச்சான்ருேருக்கு, இதுவரை ஆற்ருத நினைவுகூர் சின்னங்கள் பல வற்றை நிறுவி, தமிழ் மக்கள் யாவரும் பாவக் கழுவாய் செய்துகொள்ள வேண்டும்.

(1) நினைவுகூர் சின்னங்கள்: இவர் பிறந்த குளத்தூரில் இப்பெருமான் பெயரால் மணி மண்டபம் எழுப்பி அதில் சிறந்ததோர் புத்தக நிலையத்தை அமைத்து ஆண்டு தோறும் விழா அயர்தல்.

(2) அவர், நீதிபதியாக விளங்கிய மாயூரத்தில் வாசகசாலையும், இவ்வூர் உயர்நிலைப்பள்ளிகளில் இவர் பெயரால் பரிசும் வைத்தல். தமிழ் நாட்டில் உள்ள தமிழ் கழகங்களில் ஆற்றப்படும் புலவர் விழாக்களில் இப் புலவர் கோமான் விழாவையும் தவருது சேர்த்து நடத்தல்.

(3) தமிழகப் பெரும் ஊர்களில் நிறுவும் பொது நிலையங்களுக்கு இவரது பெயரையிடுதல்.

(4) வேத நாயகனுருடைய நூல்களைப் பல்விதச் சிறப்பங்கங்களுடன் அழகுறப் பதித்து அடக்க விலைக்கு அளித்து நாட்டில் பரவச் செய்தல்.

இப்புலவர் பெருமானுக்கு இங்ஙனம் நாம் இயற்ற வேண்டிய கைம்மாறுன பணியில் சாதி சமய வேறுபாடின்றி, நாம் யாவரும் தமிழ் மக்கள் என்ற ஒருமை மனப்பான்மையோடு யாவரும் ஒன்று சேர்ந்து இன்னும் காலந் தாழ்த்தலின்றி இப்பணிகளை உடனே ஆற்ற முன்வருமாறு தமிழக மாந்தர் யாவரையும் மிக்க வணக்கத்துடன் வேண்டிக் கொள்கின்றேன்.

அன்பன்,
ஆ. கார்மேகக்கோன்.

---

# வேதநாயகப் பெரியார்

( திருச்சி ஜி. தியாகராஜன் )

இராகமாலிகை : தாளம் : ஆதி :

**மோஹனம் :**

செந்தமிழ் நாட்டினிலே எங்கும் புகழ் மணக்கச்
சீருடன் வாழ்ந்தவர் யார்? தமது
விந்தை நகைச் சுவையால் சிந்தை விருந்தளித்த
வேதநாயகப் பெரியார் !

**ஹம்ஸாநந்தி :**

வாதும் வழக்கும் நிறை வஞ்சக உலகினில்
நீதிநூல் அளித்தவர் யார்? பெண்கள்
பேதமை அகற்றிடும் பெண்மதி மாலை தந்த
வேதநாயகப் பெரியார்!

**தன்யாசி :**

பஞ்சம் மிகுந்திடவே கஞ்சியெங்கும் வார்த்து
பசிப்பிணி தவிர்த்தவர் யார்? மனச்
சஞ்சலம் மறைந்திடும் சமரசப் பாடலால்
தமிழ் வளர்த்த பெரியார் !

**அடாணா :**

பாமரர்க் கோர் நீதி பணக்காரர்க் கோர் நீதி
பாராமல் வாழ்ந்தவர் யார்? நன்மை
தீமை இது வென் றெண்ணி தீர்ப்பனைத்தும் செய்து
சிறுமை வென்ற பெரியார்!

**ஷண்முகப்ரியா :**

புலவர் மணிகளெல்லாம் புகழ்ந்திடவே அன்று
புதுமை வகுத்தவர் யார்? துன்பம்
நிலவிய காலத்தும் நேர்மையே பெரி தென
நிலை நாட்டிய பெரியார் !

**மத்யமாவதி :**

பொருத்தமுடன் சாட்சி புனைந்தாலுமே — உண்மை
புரிந்து தெளிந்தவர் யார்? பிரதாபர்
சரித்திரத்தால் நாட்டில் தமிழ் நடையை முதலாய்த்
தந்து தவிய பெரியார் !

# நன்றியுரை

மறுமலர்ச்சியின் தந்தை மாயூரம் நீதிபதி ச. வேதநாயகம் பிள்ளையவர்களின் அறுபத்தாறுவதாண்டு நினைவு விழா சென்ற ஆண்டு சென்னையில் மயிலை இலட்சுமிபுரம் இளைஞர் சங்கம், ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம், மாணவர் மன்றம், தமிழாசிரியர் கழகம், பெத்து நாய்க்கன் பேட்டைத் தாய்மார் கழகம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற போது தமிழ் அறிஞர் பெருமக்களால் ஆற்றப்பெற்ற சிறந்த சொற்பொழிவுகளும், வேதநாயகர் நூல் நயங் குறித்து நுண்மாண் நுழை புலமிக்க அறிஞர்கள் வரைந்த சிறந்த சில கட்டுரைகளும் உள்ளுறையாகக் கொண்டு இச் சிறு மலர் உருவாகி உள்ளது.

பேரறிஞர்தம் சொற்பொழிவுகளைத் தமிழார்வமிக்க இளைஞர் திரு. ஜி. பக்தவத்சலம் குறிப்பெடுத் தெழுதித் தந்து, இம்மலர் உருவாகப் பேருதவி புரிந்தார். அவருக்கு எனது நன்றியும், வாழ்த்தும் என்றென்றும் உரித்தாகுக.

மேற் கூறப்பெற்ற விழாக்களை யெல்லாம் சிறப்புற நடத்தி, வேதநாயகர் புகழ் பரவப் பெருந்தொண்டு புரிந்த 'சினிமா உலகம்' ஆசிரியர் திரு. பி. எஸ். செட்டியார் (சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர்) அவர்களையும் இச் சமயம் நினைவு கூர்ந்து நன்றி செலுத்துகிறேன்.

இவையன்றியும், சிறப்புக் கட்டுரைகள் அளித்து இம் மலரினை அணிசெய்த அறிஞர்கள் கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. கா. அப்பாதுரைப் பிள்ளை, நடராஜன், திரு. ஜி. தியாகராஜன், திரு. சரவணபவானந்தர் ஆகியோருக்கும் எனது நன்றியறிதலான வணக்கஞ் செலுத்துகிறேன்.

இம்மலரை நன்முறையில் அச்சடித்துதவிய தே நொபிலி அச்சக மேற்பார்வையாளர், வணங்கற்குரிய தந்தை அருட் திரு. மரியருள் தம்புராஜ் சுவாமி அவர்கட்கும் விளம்பரங்கள் தந்துதவிய பெருமக்கட்கும், மற்றும் பலவகையிலும் இம்மலர் வெளிவரத் துணை புரிந்து ஊக்கிய பெருமக்கள் அனைவர்க்கும் எம் நன்றி உரியதாகுக!

முதல் முயற்சியாக வெளிவரும் இச்சிறு மலர்க்கண் குற்றங் குறைகள் உளவேல் அவற்றை அறிஞர் பொறுப்பாராக! வளருந் தமிழுக்கு வாழ்வளிக்க விரும்பும் நல்லோரெல்லாம் இதனை வரவேற்று வாழ்த்துவார்களென நம்புகிறேன். வணக்கம்.

வாழ்க வேதநாயகர் தொண்டு!

வே. ஞா. ஆரோக்கியசாமி.
(வேதநாயகர் பேரர்)
27, S. N. செட்டித் தெரு.
**ராயபுரம், சென்னை-13.**

Tele Address : 'SHELLPAINT' Telephone : 3642

# A. S. MANICKAM & CO.,

PAINT MERCHANTS.

*Authorized Dealers for :*

**Messers Shaliwar Paint,**
**Colour & Varnish Co., Ltd.**

**Jensen and Nicholson (India) Ltd.**

**British Paints (India) Ltd.**

**East India Paint and Chemical Works Ltd.**

**Asian Oil and Paint Co., (I)**
**Private Ltd.**

**Noble Paint & Varnish Co., Ltd**

AND STOCKISTS OF MANY POPULAR
BRANDS IN PAINTS & COLOURS.
AT REASONABLE RATES

## ORDERS SOLICITED

46, Venkatachala Mudali Street,
MADRAS-3.

# P. Johnson & Company

Wholesale Dealers in Chemicals
Drugs and Patent Medicines Etc.

Telephone: 2567 Telegrams: "STREPTOMY"
MADRAS.

*Importers from:*
REPUTED FOREIGN MANUFACTURERS.

*Suppliers to:*
COFFEE AND TEA PLANTATIONS
MISSION HOSPITALS, ETC.

**150, Nyniappa Naick Street—MADRAS 3.**

Phone: 4027

# FASHION FLASHES!

*LIBERTY THE MEN'S WEAR*
SHIRTS :: BUSH-SHIRTS :: PYJAMA SUITS
TROUSERS :: BOWS & HANKIES.

*Apeal to the touch!*

BENARAS, BANGALORE, MYSORE,
PRINTED CHIFFON & COTTON SAREES VARIETIES OF
CHOLIES & DRESS MATERIALS.

Lovely colours at the Loveliest!
*Visit us & Make your choice.*

SHOBHA
(TEXTO RIUA)
40/42, RATTAN BAZZAR, MADRAS-3.

# சுதேசி டைப் பவுண்டரி

(ஸ்தாபிதம்: 1906) தந்தி: "புவனு" டெலிபோன்: 8291

51, குருவப்ப செட்டித் தெரு.

சிந்தாதிரிப்பேட்டை :: மதராஸ்-2

தமிழ், இந்தி, மலையாளம், தேவநாகரி, தெலுங்கு, குஜராத்தி, சிங்களம், ஒரியா, கன்னடம், கிரந்தம், உருது, மகாராஷ்டிராம், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பதினன்கு பாஷைகளிலும் எழுத்துக்கள் தயாரிக்கப்படும் பவுண்டரி இது ஒன்றேதான்!

இது எந்த தயாரிப்புகட்கும் தலைசிறந்து, நீடித்து உழைக்கக்கூடியதும், அழகும் கவர்ச்சியும் பொருந்தியனவாகும். விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால் மேனட்டு முறைப்படி தயாரிக்கப்பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும், "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப்பெற்றுள்ளன. மேலும், அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

பூரா விவரங்களுக்கு எழுதவும்:

**தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்**


நிர்வாக பாகஸ்தர்.

மக்கள் பணியே மாசற்ற இன்பம்
நன்மக்களுக்கு ஓர் நற்செய்தி.
தீராத வியாதியெனும் திகைப்பை ஒழியுங்கள்.
டாக்டர் N. வேதநாயகம் பிள்ளை அவர்களின்
(Ayurvedic & Homeoapathic Physician, T. B. & Asthma Specialist)
கைதேர்ந்த அனுபவத்தால்
டி. பி., ஆஸ்த்மா, பச்சவாதம், கீல்வாதம், வலிப்பு, நீரிழிவு, குன்மம், மேகம், சூதகம் போன்ற நீடித்த நோய்களுக்கு நிரந்தர சிகிச்சை பெற ஆலோசனைக்குரிய இடம்
நாயகம் ஹோமியோ டிஸ்பென்சரி
(சென்னைக் கிளை)
87, திருப்பள்ளித் தெரு, சென்னை-1
ஆலோசனை நேரிலோ தபால் மூலமாகவோ பெறலாம்
நோயற்ற வாழ்வே மக்களின் குறைவற்ற செல்வம்
H. O.: 13, மாகாளிபட்டிரோட், மதுரை.
Branch: 49, தெற்கு வெளிவீதி, மதுரை.
Dr R. ராமசாமி நாயுடு
Dr. M. V. செட்டியார் } Asst. Physicians.

25 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டில் பொது மக்களின் ஆதரவையும் நன்மதிப்பையும் பெற்றவர்கள்
போடோ சம்பந்தப்பட்ட (ஆயில் பெயின்டிங், ப்ரோமைட் என்லார்ஜ்மென்ட் முதலிய) சகலவிதமான வேலைகளில் திறமையும் நாணயமும் உள்ளவர்கள்,
ஆர். தாஸன் ஸ்டுடியோ
1/48 ரட்டான் பஜார், சென்னை 3
(டெலிபோன்: 3419)
கிளை நிலையங்கள்:—
காரைக்குடி — மதுரை — கோயமுத்தூர்
கல்லுக்கட்டி, ஜடாமுனிகோயில் தெரு, ஒப்பணைகார வீதி.

# பிரபலமான் டைமண்டு பிராண்ட் பாக்குகள்

*தயாரிப்பாளர்* : S. P. கொத்தாள நாடார்.



ஹெட் ஆபீஸ் : விருதுநகர்
போன் : 158 ரெசிடென்ஸ் : 58
டெல். *அட்ரஸ்* : "SAPAKO"

*பிராஞ்சு* :
95, Old Moor St., COLOMBO
*Tel* : 'UTHISTIRAN'

**S. P. கொத்தாள நாடார்**

சாத்தூர் தாலூகா, அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர்.

Estd. 1927 PHONE : 3380

# K. M. STORE

IMPORTERS, EXPORTERS & COMMISSION AGENTS,
OILMAN, PROVISIONS & GENERAL MERCHANTS,
GOVT. CONTRACTORS,

7 & 8, Corpn. Fruit Market,

**ESPLANADE, MADRAS-1.**

---

Telephone: 4752

# *M. A. Hadi*

Estd. 1935

*General Merchant and Direct Importer in Oilman Stores*
*Provisions, Fresh & Dried fruits,*
**9-10, Fruit Market, MADRAS-1**

*Branch:*
MINERVA GLASSWARE HOUSE

*Dealers in:*
**Enamelware, Crockery, Cutlery & Lampware Etc,**
**No. 1, FRUIT MARKET, MADRAS-1.**

*Codes:*
**A. B. C. BENTLEYS 6TH EDITION.**

*Bankers:*
GRINDLAYS BANK LTD., MADRAS.

*President:*
**FRUIT MARKET MERCHANTS' ASSOCIATION.**

## முனிசிப் வேதநாயகம் பிள்ளை

இயற்றிய

# அரிய நான்கு நூல்கள்

[ கழக வெளியீடுகள் ]

**1. பிரதாப முதலியார் சரித்திரம் :**

இனிமையும் தெளிவும், உண்மையும் உயர்ந்த குறிக்கோளும் பொதிந்த அரியதொரு நவீனம். கற்பார் மகிழ்வெய்துமளவுக்கு அரிய நிகழ்ச்சிகள் கொண்டது. தூய தமிழ் நடையில் பதிப்பிக்கப்பெற்றுளது.

விலை ரூ. 3—8—0

**2. சுகுணசுந்தரி சரித்திரம் :**

உடலோம்பல், குழந்தை மணம் முதலியவற்றின் நன்மை தீமைகளை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. சமூகப் பழக்கவழக்கங்களின் நிலைமைகளையும் பிறவும் கதை வழி தெளிவாக இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

விலை ரூ. 1—4—0

**3. பெண் கல்வி :**

இதில் பெண் கல்வி, பெண்மானம், பெண்மதி மாலை என்னும் தலைப்புக்களின்கீழ் பெண்களுக்கு வேண்டிய கல்வியறிவு ஒழுக்கங்களும், அவர்கள் செய்யவேண்டிய கடமைகளும் விளக்கியுள்ளார். ஒவ்வொரு பெண்ணும் படித்தறியவேண்டிய நூல்.

விலை ரூ. 2—4—0

**4. நீதிநூல் :**

நீதிக்கருத்துக்களடங்கிய அறுநூறுக்கும் மேற்பட்ட நறுந்தமிழ்ச் செய்யுட்கள் கொண்டது. எல்லா அறமுறைகளையும் உணர்த்தும் இப்பாடல்களுக்குக் கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாதபிள்ளை அவர்கள் உரை எழுதியுள்ளார்கள்.

விலை ரூ 3—0—0

இவர் எழுதிய பிற நூல்களும், மற்ற எல்லாத் தமிழ் நூல்களும், கழக நிலையங்களில் எப்பொழுதும் கிடைக்கப்பெறும்.

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிமிடெட்.

1/140, பிராட்வே, சென்னை—1

தலைமை : திருநெல்வேலி

தாய்மார்களே, சகோதரி, சகோதரர்களே தங்களுக்கு வேண்டிய ஜவுளிகளுக்காக மற்ற இடங்களுக்கு போகுமுன் எங்கள் கடைக்கு

# ராமா எம்போரியம்

## 71-72 ரத்தன் பஜார் மதராஸ் 3

**விஜயம் செய்யக்கோருகிறோம்.**

ஜெண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் பலர் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அநேக ரகங்கள் இருக்கின்றன. எங்களிடம் கைதேர்ந்த தையல்காரர் இருக்கிறார், ஒருதரம் பரிசோதித்துப் பாருங்கள்.

சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களின் சௌகரியத்திற்காக தாங்கள் வாங்கும் ஜவுளிகளுக்கு சுலபமான கெடுக்களில் மாதா மாதம் பணம் கட்டும்படியான பிரத்தியேக ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம். முழு விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

## RAMA EMPORIUM

**71-72 RATTAN BAZAAR MADRAS, 3.**

---

**நம்பிக்கையும் நாணயமுமே எங்கள் இலட்சியம்**

மதிப்பும் புகழும் நிறைந்த

பிலிப்ஸ் மின்சார பல்புகளும் இதர மின்சார சாமான்களும் எங்களிடம் கிடைக்கும்

# R. S. M. & Co.,

*Authorised Dealers:*

## For Philips Lamps,

453, Mint Street, MADRAS-3

ESTD. 1918

Phone No. 4104 Tel. GENTLE

OUR MOTTO
SMALL PROFITS. QUICK RETURNS.

# C. S. RAJASUNDARAM CHETTY & SONS,

2, Rattan Bazaar Road, P. T. MADRAS.

*Dealers in :*

High Class Silk, Woollen, Linen
& Fancy Cotton Piece Goods.
Railway & Government Contractors.

*Try Us Before You Buy Elsewhere*

In Clothing, We Always
Have Something New

*Visit us before you go elsewhere*

# JOONUS SAIT & SONS

RATTAN BAZAAR,

**MADRAS—3**

PHONE 2530.

"Gents Tailoring a Speciality"

## பிரதாப முதலியார் சரித்திரம்

மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை இயற்றிய இப்பேரிலக்கியம், ஆக்கியோர் பதித்த முதற் பதிப்பிற் சிறிதும் வழுவாது புதிதாகப் பதித்து, வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை மலிவுப் பதிப்பு ரூ. 4—8—0. கலிக்கோக் கட்டுள்ள பரிசிற்குரிய உயர்நிலைப் பதிப்பு ரூ. 5—8—0.

## தமிழ்த் தூது

அறிஞர் தனிநாயக அடிகள், தம் உலகச் செலவிற் கண்ட நாடுகளின் பற்பல செய்திகளையும், தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும், தமிழ் மொழியை உலகத்தின் வெவ்வேறு நாடுகளிற் பரப்புதற்குரிய வழி வகைகளையும், சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகளையும், எடுத்துக் கூறியுள்ள சிறிய இனிய நூல்.

விலை : அணா 8

## தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்

தேம்பாவணி ஆராய்ச்சியிற் பெயர் பெற்ற ஆசிரியர் ஜே. ஜி. சுந்தரம் அவர்கள், வீரமாமுனிவரின் வரலாற்றையும், அவர் இயற்றிய நூல்களின் இலக்கியச் சுவையையும் எடுத்துக் கூறியுள்ள ஆராய்ச்சி நூல்.

விலை : ரூ. 1—4—0

மேற்பார்வையாளர் :

**தமிழ் இலக்கியக் கழகம்**

52, புதுக்கிராமம், தூத்துக்குடி